Registered as a Newspaper

பக்கங்கள் – 12

விலை – ரூபா 50

# உதயன்

சுடர் : 39
கதிர் : 127

திங்கட்கிழமை
01 ஏப்ரல் 2024

முச்சந்தி முரளி



“உந்த முன்னாள் விதானையார் மாதிரி உருட்டுறதுக்கு உலகத்திலேயே வேற ஆள் இல்லை கண்டியளோ”

யூனியன் கல்லூரி விளையாட்டுப்போட்டியில்

# காந்தள் மலர் அலங்காரம்; பொலிஸ் கடும் விசாரணை!



## மாணவர்களின் வீட்டுக்குச் சென்றும் புலனாய்வாளர்கள் துருவல்

**யாழ்ப்பாணம், ஏப்ரல் 1**

**தெல்லிப்பழை யூனியன் கல்லூரியில் இடம்பெற்ற வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டியின் போதான இல்ல அலங்கரிப்புத் தொடர்பில் தெல்லிப்பழைப் பொலிஸார், குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தினர், இராணுவப் புலனாய்வாளர்கள் எனப் பல தரப்பினரும் தனித்தனியாக விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.**

11

## பிரபாகரன் இருந்திருந்தால் அவரை ஜனாதிபதியாக்கியிருப்பர்



### ஜே.வி.பி.யை சாடுகிறார் ஹிருணிகா

கொழும்பு, ஏப். 1

தேசிய மக்கள் சக்தியின் (ஜே.வி.பி.) அடிமைகள், பிரபாகரன் இன்று உயிருடன் இருந்திருந்தால் அவர்தான் எங்கள் ஜனாதிபதி எனக் கோஷம் எழுப்பி இருப்பார்கள் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் பிரதி தேசிய அமைப்பாளரும் நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினருமான ஹிருணிகா பிரேமச்சந்திர தெரிவித்தார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் பதுளை மாவட்ட மகளிர் மாநாட்டில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

2005ஆம் ஆண்டிலும் சூழ்ச்சிமூலமே ராஜபக்ச ஆட்சியைப் பிடித்தார். இதற்கு ஜே.வி.பி.யும் உதவியது. 2005 ஜனாதிபதித் தேர்தலில் வெற்றிபெறு

11

## கிணற்றிலிருந்து சடலம் மீட்பு

யாழ்ப்பாணம், ஏப். 1

புன்னாலைக்கட்டுவன் தெற்கிலுள்ள தோட்டக் கிணற்றிலிருந்து குடும்பத் தலைவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

அதேயிடத்தைச் சேர்ந்த சின்னத்துரை தவராசா (வயது - 63) என்பவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

மேற்படி நபரைக் காணவில்லை என உறவினர்கள் தேடிய நிலையில் கிணற்றிலிருந்து அவர் சடலமாக மீட்கப்பட்டார்.

அவரது சடலம் உடற்கூற்று பரிசோதனைகளுக்காக யாழ்ப்பாணம் போதனா மருத்துவ

11

இரவிரவாகச் சுற்றிவளைப்பு

## துன்னாலையில் 26 பேர் கைது!



பருத்தித்துறை, ஏப். 1

துன்னாலையில் இரவோடு இரவாக பொலிஸாரும் விசேட அதிரடிப்படையினரும் இணைந்து மேற்கொண்ட சுற்றிவளைப்பில் ஆண்கள், பெண்கள்

11

## தாதியர்கள் போராட்டம்

கொழும்பு, ஏப். 1

நாளையும், நாளை மறுதினமும் அனைத்துத் தாதியர்களும் மூன்று மணித்தியாலங்கள் கடமையிலிருந்து விலகித் தொழிற்சங்க நடவடிக்கைகளில் ஈடுபடவுள்ளதாக அகில

11

## வடக்கில் கடந்த ஆண்டு 353 பேர் உயிர்மாய்ப்பு!

யாழ்ப்பாணம், ஏப். 1

வடக்கு மாகாணத்தில் கடந்த ஆண்டில் மாத்திரம் 353 பேர் தவறான முடிவு எடுத்து உயிரை மாய்த்துள்ளனர். இவர்களில் ஆண்களே அதிகம் என வடக்கு மாகாண மூத்த பிரதிப் பொலிஸ்மா அதிபர் அலுவலகம் வழங்கிய தகவலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

11

## அண்டை நாடொன்றுதான் ஈஸ்டர் தாக்குதல் சூத்திரதாரி

### சி.ஐ.டி.யிடம் சொன்னாராம் மைத்திரி



கொழும்பு, ஏப். 1

ஏப்ரல் 21 தாக்குதலின் பிரதான சூத்திரதாரி இலங்கையின் அண்டைய நாடுகளில் ஒன்று என முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன குற்றப்புலனாய்வுத் திணைக்களத்திடம் தெரிவித்துள்ளதாக உள்ளகத் தகவல்கள் குறிப்பிடுகின்றன.

2019ஆம் ஆண்டு உயிர்த்த ஞாயிறு தினத்தன்று நடத்தப்பட்ட தாக்குதலின் பின்னணியில் உள்ளவர்கள் குறித்து தாம் அறிந்துள்ளதாக முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கடந்த 22ஆம் திகதி தெரிவித்திருந்தார்.

இது தொடர்பில் குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தினர் அவரிடம் கடந்த 25ஆம் திகதி வாக்குமூலம் பெற்றிருந்தனர்.

ஏப்ரல் 21 தாக்குதலின் பிரதான சூத்திரதாரி இலங்கையின் அண்டைய நாடுகளில் ஒன்றுதான் என்று அவர் வாக்குமூலம் வழங்கியுள்ளாரென உள்ளகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. அண்மையில்

11

## மருத்துவமனைப் பணியாளர் மீது குறிகாட்டுவானில் தாக்குதல்

யாழ்ப்பாணம், ஏப். 1

குறிகாட்டுவான் இறங்குதுறையில் வைத்து புங்குடுதீவு மருத்துவமனையில் பணியாற்றுபவர் மீது தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

11

## எரிபொருள் விலையில் திருத்தம்

கொழும்பு, ஏப். 1

எரிபொருள்களின் விலைகளில் நேற்று நள்ளிரவு முதல் மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

ஒக்ரேன் 95 ரக பெற்றோல் லீற்றர் ஒன்றின் விலை, 7 ரூபாவால் குறைக்கப்பட்டுள்ளதுடன் அதன்

11



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆடைகள் இறக்குமதிக்கு 470.6 மில். டொலர் செலவு

கொழும்பு, ஏப்.1

இந்த வருடம் ஜனவரி மற்றும் பெப்ரவரி ஆகிய இரண்டு மாதங்களில் ஆடை மற்றும் ஆடை தொழிற்சாலைகளுக்கான உபகரணங்களின் இறக்குமதிக்காக 470.6 மில்லியன் அமெரிக்க டொலர் செலவிடப்பட்டுள்ளது. இலங்கை மத்திய வங்கி வெளியிட்ட அறிக்கையில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

2023 ஆம் ஆண்டின் முதல் இரண்டு மாதங்களுடன் ஒப்பிடுகையில், இந்த ஆண்டின் முதல் இரண்டு மாதங்களில் ஆடை மற்றும் ஆடை துணைப் பொருள்களை இறக்குமதி செய்வதற்கு 87.2 மில்லியன் அமெரிக்க டொலர் செலவிடப்பட்டுள்ளது என்றும் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)

# பப்பாசிச் செய்கை; குடாநாட்டில் பாதிப்பு

யாழ்ப்பாணம், ஏப். 1

யாழ். குடாநாட்டில் பப்பாசிச் செய்கை பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது என்று செய்கையாளர்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

தற்போது நிலவும் கடும் வறட்சியான காலநிலையால் பப்பாசி மரங்களில் ஒருவித நோய்த்தாக்கம் பரவி வருகின்றது.

சில இடங்களில் இந்த நோய்த் தாக்கத்தால் பப்பாசி மரங்கள் முழுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளன.

தற்போது பப்பாசிப் பழத்துக்கு பற்றாக்குறை ஏற்பட்டுள்ளதுடன் கிலோ 250 ரூபா வரையில் விற்பனை செய்யப்படுகின்றது என்றும் செய்கையாளர்கள் தெரிவித்துள்ளனர். (ச-17)

# ஒட்டுசுட்டானில் புத்தரிசி விழா

முல்லைத்தீவு, ஏப். 1

முல்லைத்தீவு ஒட்டுசுட்டானில் கமநல அபிவிருத்தி திணைக்களத்தின் ஏற்பாட்டில் புத்தரிசிப் பெருவிழா அண்மையில் இடம்பெற்றது.

மாவட்ட கமநல அபிவிருத்தித் திணைக்கள உதவி ஆணையாளர் பரணிதரன் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் முல்லைத்தீவு மாவட்டச் செயலர் அ.உமாமகேஸ்வரன் பிரதம விருந்தினராக பங்கேற்று புத்தரிசி தானம் வழங்கும் நிகழ்வை ஆரம்பித்து வைத்தார். (ச-500,13,113)



# மஹிந்த நாட்டுக்குச் செய்ததை மக்கள் மறக்கமாட்டார்களாம்

## பந்தம் பிடிக்கின்றார் ஜோன்ஸ்டன்

**கொழும்பு, ஏப்.1**

**எதிரணிகள் எத்தகைய விமர்சனங்களை முன்வைத்தாலும் பிரபாகரனின் கதையை முடித்து, சுதந்திரம் பெற்றுக்கொடுத்த மஹிந்த ராஜபக்சவை நாட்டு மக்கள் மறக்கமாட்டார்கள் என்று நாடாளுமன்ற உறுப்பினர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.**

மஹிந்த ராஜபக்ச தலைமையில் தங்காலையில் நடைபெற்ற மொட்டுக் கட்சிக் கூட்டத்தில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

"மஹிந்தவின் முகத்தைப் பார்த்தாலே போதும். அவருக்கு எதிராக எப்படித்தான் விமர்சனங்களை முன்வைப்பதற்கு முயற்சிகள் எடுக்கப்பட்டாலும் அவருக்கான கௌரவம் மக்கள் மத்தியில் எப்போதும் இருக்கும். அவர் (மஹிந்த) செய்த சேவைகளையும், பிரபாகரனை அழித்து நாட்டுக்குப் பெற்றுக் கொடுத்த சுதந்திரத்தையும் இந்நாட்டு மக்கள் ஒருபோதும் மறக்கமாட்டார்கள்.

88, 89 ஆண்டுகளில் பிரேமதாஸ ஜனாதிபதியாவதற்கு ஜே.வி.பி.யினர்தான் வழி சமைத்துக்கொடுத்தனர்.

ஆயுதக் கலாசாரத்தை அறிமுகப்படுத்தியதும் அக்கட்சியினர்தான். சந்திரிகா, மஹிந்தவுடனும் இணைந்து ஆட்சிய மைத்துள்ளனர். ஆக எந்நாளும் 'டீல்' அரசியலையே அவர்கள் நடத்தியுள்ளனர்.

போர் நடைபெறும்போது ஆட்சியைக் கவிழ்க்க முற்பட்டனர். 2010 இல் பொன்சேகா பக்கம் நின்றனர்.

2015இல் சிறிசேனவுக்குச் சோரம் போனார்கள். பொருளாதாரச் சீரழிவுக்குப் புலிகளும், அநுரகுமார அணியினரும்தான் பொறுப்புக்கூற வேண்டும்- என்றார். (எ-44)

# திருட்டு சந்தேகநபர்கள் கைது

கிளிநொச்சி, ஏப்.1

பல்வேறு திருட்டுச் சம்பவங்களுடன் தொடர்புடைய குற்றச்சாட்டில் ஆறு பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று அக்கராயன் பொலிஸார் தெரிவித்தனர்.

கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா போன்ற பகுதிகளில் நடந்த பல்வேறு திருட்டுச் சம்பவங்களுடன் தொடர்புடையவர்களே கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் குறிப்பிட்டனர்.

சந்தேகநபர்களிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணையில் ஒருதொகுதி தங்கநகைகள் மீட்கப்பட்டுள்ளன என்றும், கைது செய்யப்பட்டவர்கள் கிளிநொச்சி மற்றும் வவுனியாவைச் சேர்ந்தவர்கள் எனவும் பொலிஸார் தெரிவித்தனர். (எ-113)

# தயாசிறிக்கு சு.க. அழைப்பு

கொழும்பு, ஏப்.1

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியுடன் இணைந்து செயற்படவேண்டும் என்று அந்தக் கட்சியின் முன்னாள் பொதுச் செயலாளர் தயாசிறிஜயசேகரவுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது எனத் தெரியவருகின்றது.

பொதுச் செயலாளர் பதவி அல்லாமல் உப தலைவர் பதவியொன்றை வழங்குவதற்கு அந்தக் கட்சி தயாராகவுள்ளது எனவும் அறிய முடிகின்றது. இதுதொடர்பில் தயாசிறி தரப்பில் இன்னும் எதுவும் தெரியப்படுத்தப்படவில்லை.

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியில் இருந்து நீக்கப்பட்ட பின்னர் தயாசிறி ஜயசேகர, மனிதநேய மக்கள் கூட்டணி எனும் புதிய அரசியல் கூட்டணியொன்றை உருவாக்கியுள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (எ-44)

# சீனா விமானத்தில் வந்தடைந்தார் பிரதமர்

கொழும்பு, ஏப். 1

சீனாவுக்கான உத்தியோகபூர்வ பயணத்தை முடித்துக்கொண்டு பிரதமர் தினேஷ் குணவர்த்தன நாட்டை வந்தடைந்துள்ளார்.

சீனா ஈஸ்டன் எயார்லைன்ஸ் விமானம் மூலம் கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தை பிரதமர் மற்றும் அவரது குழுவினர் வந்தடைந்தனர். இந்தப் பயணத்தின்போது சீனாவுக்கும் இலங்கைக்கும் இடையில் பல உடன்படிக்கைகள் கைச்சாத்திடப்பட்டதுடன் கடன் மறுசீரமைப்பு தொடர்பில் சீன அதிகாரிகளுடன் கலந்துரையாடப்பட்டது என்றும் தெரிவிக்கப்படுகிறது. (ச-இ)

வடக்கு மாகாணத்தில்

# நனோ நீர் சுத்திகரிப்பு 24 நிலையங்கள் திறப்பு

வடக்கு மாகாணத்தில் சிறுநீரக நோயைக் கட்டுப்படுத்தவும் குடிதண்ணீர்ப் பிரச்சினையைத் தீர்க்கவும் மேலும் 24 நனோ நீர் சுத்திகரிப்பு நிலையங்கள் நிறுவப்படவுள்ளன என்று நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

24 நீர் சுத்திகரிப்பு நிலையங்களும் எதிர்வரும் 6 ஆம் திகதி நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தலைமையில் மக்களிடம் கையளிக்கப்படவுள்ளன.

வவுனியா மாவட்டத்தில் 6 நனோ நீர் சுத்திகரிப்பு நிலையங் களும் கிளிநொச்சி மாவட்டத்தில் 18 நனோ நீர் சுத்திகரிப்பு நிலை யங்களும் திறக்கப்படவுள்ளன என்றும் தெரிவிக்கப்படுகிறது.

அமைச்சின் கீழ் இயங்கும் மீள்குடியேற்றப் பிரிவு, சமூக நீர்த் திணைக்களத்துடன் இணைந்து இந்தத் திட்டத்தை நடைமுறைப்படுத்துகிறது. (ச-இ)

இருபது ஆண்டுகளாக

# தூய்மையாக்கப்படாத 161 நீர்த்தாங்கிகள்!

கொழும்பு தேசிய மருத்துவமனையின் பிரதான நீர்த்தாங்கி உள்ளிட்ட நீர்த்தாங்கிகள் சுத்தம் செய்யப்படாதுள்ளன என்று கொழும்பு தேசிய மருத்துவமனையின் பிரதிப் பணிப்பாளர் மருத்துவர் ருக்ஷான் பெல்லன தெரிவித்துள்ளார்.

கொழும்பு தேசிய மருத்துவமனையில் தற்போது 161 நீர்த் தாங்கிகள் உள்ள நிலையில், சுமார் 20 வருடங்களாக அவை சுத்தம் செய்யப்படவில்லை என்று ருக்ஷான் பெல்லன சுட்டிக்காட்டியிருந்தார்.

இந்த நீர்த்தாங்கிகள் 3 மாதங்களுக்கு ஒருமுறை சுத்தம் செய்யப்பட வேண்டியநிலையில் சுத்தம் செய்யப்பட்டமைக்கான எவ்வித சாட்சியமும் இல்லை. சுகாதாரப் பரிசோதகர்கள் இது தொடர்பில் கவனம் செலுத்தவில்லை என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (எ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 10 இலட்சம் புதிய வாக்காளர்கள் ஜனாதிபதித் தேர்தலில் இணைவு

**கொழும்பு, ஏப்.1**

**2024 ஜனாதிபதித் தேர்தலில் சுமார் ஒரு கோடியே எழுபது இலட்சம் வாக்காளர்கள் வாக்களிக்கப் பதிவு செய்துள்ளனர். இந்தத் தொகையில் 18 வயதைப் பூர்த்திசெய்த 10 இலட்சம் புதிய வாக்காளர்கள் உள்ளடங்குகின்றனர் என்று தேர்தல்கள் ஆணைக்குழு மேலும் தெரிவித்துள்ளது.**



ஜனாதிபதித் தேர்தலை நடத்துவதற்கான அடிப்படை ஏற்பாடுகள் நிறைவடைந்துள்ளன. ஜனாதிபதித் தேர்தலுக்கு ஆயிரம் கோடி ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. தேவையேற்படின் கூடுதல் பணத்தைப் பெற்றுக்கொள்ள முடியும். தேர்தலுக்குத் தேவையான எழுதுபொருள்கள் மற்றும் ஏனைய பொருள்களைக் கொள்வனவு செய்வதற்கும் ஆணைக்குழு செயற்பட்டு வருகின்றது என்றும் தேர்தல்கள் ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகம் ஆர்.எம்.ஏ.எல். ரத்நாயக்க தெரிவித்தார். (ச-இ)

## அபிவிருத்தி பணியாளருக்கு மேலதிக கொடுப்பனவு

கொழும்பு, ஏப்.1

பிராந்திய செயலாளர் உள்ளிட்ட பல பதவிகளுக்கு இம்மாதம் முதல் எதிர்வரும் டிசெம்பர் மாதம் வரை மேலதிக கொடுப்பனவுகளை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று மாகாணசபைகள், உள்ளூராட்சி மற்றும் சுற்றாடல் இராஜாங்க அமைச்சர் ஜானக வக்கும்புர தெரிவித்துள்ளார்.

அதன்படி பிரதேச செயலர், உதவிப் பிரதேச செயலர், உதவிப் பணிப்பாளர், கணக்காளர் ஆகிய பதவிகளுக்கு மேலதிக கொடுப்பனவு வழங்கப்படவுள்ளது. அபிவிருத்திப் பணிகளை துரிதப்படுத்தும் நோக்கில் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றும் இராஜாங்க அமைச்சர் தெரிவித்தார். (ச-இ)

## மேதினக் கூட்டத்தோடு பரப்புரைகள் ஆரம்பம்!

### கட்சிகள் திட்டம்

கொழும்பு, ஏப்.1

மேதினக் கூட்டத்தோடு தேர்தல் பரப்புரை நடவடிக்கைகளை முழுவீச்சுடன் முன்னெடுப்பதற்கு தென்னிலங்கை பிரதான அரசியல் கட்சிகள் வியூகம் வகுத்துவருகின்றன என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன, ஐக்கிய மக்கள் சக்தி, தேசிய மக்கள் சக்தி என்பன தற்போது தொகுதிக் கூட்டங்களையும், மகளிர், இளைஞர் மாநாடுகளையும் நடத்தி வருகின்றன.

இந்த நிலையில், மேதினக் கூட்டத்தை மிகவும் பிரமாண்டமாக நடத்தி பலத்தைக் காட்டுவதற்கும் கட்சிகள் தயாராகி வருகின்றன. இதற்கான ஏற்பாடுகள் தற்போது இடம்பெற்று வருகின்றன என்றும் தெரிவிக்கப்படுகிறது. அதேவேளை அடுத்தமாதம் முதல் புதிய அரசியல் கூட்டணிகளும் மலரவுள்ளன என்றும் தெரிவிக்கப்படுகிறது. (ச-இ)

## கிணற்றில் வீழ்ந்து பாலகன் சாவு

கொழும்பு, ஏப். 1

இரண்டு வயதுக் குழந்தையொன்று கிணற்றில் விழுந்து உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்தச் சம்பவம் பலாங்கொடை பகுதியில் நேற்றுமுன்தினம் நடந்துள்ளது. ஆண் குழந்தையொன்றே இவ்வாறு உயிரிழந்துள்ளது என்றும் பொலிஸார் தெரிவித்தனர். (ச-இ)



## முட்டை விலை சரியும்

கொழும்பு, ஏப்.1

எதிர்வரும் புத்தாண்டு காலத்தில் முட்டை ஒன்றின் விலை 35 ரூபாவை எட்டும் என்று விவசாய மற்றும் பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சு தெரிவித்துள்ளது.

தற்போது உள்ளூர்ச் சந்தையில் கோழி முட்டை ஒன்றின் விலை 42 முதல் 48 ரூபாவாகக் காணப்படுகிறது என்றும் விவசாய அமைச்சு தெரிவித்துள்ளது. (ச-இ)

## ரணிலுடன் இணைந்தால் சஜித்துக்கு ஆதாயமாம்!

கொழும்பு, ஏப்.1

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடன் இணைந்து செயற்பட்டால் அது சஜித்துக்கே சாதகமாக அமையும். இதுதொடர்பில் அவர் சாதகமாகப் பரிசீலிக்க வேண்டும் என்று அமைச்சர் ஹரின் பெர்னாண்டோ தெரிவித்தார்.

ஐக்கிய மக்கள் சக்தியுடன் இன்னும் அதிகாரபூர்வமாக பேச்சுகள் ஆரம்பிக்கப்படவில்லை. உத்தியோகபூர்வமற்ற ரீதியில் சந்திப்புகள் இடம்பெறுகின்றன. சஜித் பிரேமதாஸ ரணிலுடன் பயணித்து அனுபவத்தைப் பெறுவதே சிறந்தது. ஜனாதிபதித் தேர்தலில் ரணில் விக்கிரமசிங்கவே பொதுவேட்பாளராகப் போட்டியிடவேண்டும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (எ-44)

## மேதினத்தை முன்னிட்டு கொழும்பில் பாதுகாப்பு!

கொழும்பு, ஏப்.1

மேதினத்தை முன்னிட்டு கொழும்பில் விசேட பாதுகாப்புத் திட்டங்கள் செயற்படுத்த பாதுகாப்புத் தரப்பினர் தயாராகிவருகின்றனர் என்று தெரிவிக்கப்படுகிறது. பிரதான அரசியல் கட்சிகள் கொழும்பை மையப்படுத்தியே மேதினக் கூட்டத்தையும், பேரணியையும் நடத்தவுள்ளதால் இந்த ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. (எ-44)

## தினம் தெரியுமோ?

என்னதான் காசு கொட்டிக்கிடந்தாலும், இன்னும் எப்பிடி எப்பிடியெல்லாம் அந்தக் காசைச் சேர்க்கலாம் எண்டதுதான் கனபேரின்ர நினைப்பா இருக்கும். அப்பிடியான ஆசைக்கு அதிகாரியள் மட்டும் விதிவிலக்கில்லை. ஆனாலும் அப்பிடி அவையள் ஆசைப்பட்டாலும் அதுக்குக் குறுக்க ரூல்ஸ்கள் வந்து முட்டுக்கட்டை போடுறதால, குறுக்கு வழியளாலதான் அவை உழைக்க முடியும்.

அரசாங்கத்தில உள்ள நிர்வாக உயரதிகாரிகளில 'கிரேட் வன் ஒப்பீஸர்ஸ்' எண்டுற முதல் தர அதிகாரியளுக்கு அரசாங்கம் கனக்கச் சலுகைகளைக் குடுத்திருக்கு. அதில ஒண்டுதான், அவையின்ர வாகனச் செலவுக்கு அரசாங்கமே காசு குடுக்கிறது. இந்த 'கிரேட் வன் ஒப்பீஸர்ஸ்' ஒப்பீஸ் வாகனத்தில வேலைசெய்யிற மாவட்டத்துக்குள்ள போய் வாறதுக்காக ஒவ்வொரு மாசமும் 60 லீற்றர் டீசலுக்கான காசை, அவையின்ர சம்பளத்தோட சேர்த்து அரசாங்கம் குடுக்கும். கூடுதலா இந்த 'கிரேட் வன் ஒப்பீஸர்ஸ்' தங்கட தனிப்பட்ட தேவைக்காகத்தான் ஒப்பீஸ் வாகனத்தைப் பாவிக்கிறது கூட. அப்பிடி ஒப்பீஸ் வாகனத்தைப் பாவிக்காமல் அவையள் சொந்த வாகனத்தைப் பாவிச்சினம் எண்டால், இந்த 60 லீற்றர் டீசல் காசைவிட மேலதிகமாக இன்னும் ஒரு 60 ஆயிரம் ரூபாவை அரசாங்கம் இவைக்கு சம்பளத்தோட குடுக்கும். ஏனெண்டால் சொந்த வாகனம் எண்டால், அதுக்குரிய ட்ரைவர் சம்பளம், வாகனத் தேய்மானம் எண்டதுகளுக்காகத்தான் இந்த மேலதிக கொடுப்பனவாம். எப்பிடியும் கூட்டிக் கழிச்சுப் பார்த்தால், சொந்த வாகனம் பாவிக்கிற 'கிரேட் வன் ஒப்பீஸர்' மாருக்கு 84 ஆயிரம் ரூபா சம்பளத்தை விட மேலதிகமாகக் கிடைக்கும்.

இந்த ரூல்ஸை வைச்சுத்தான் இஞ்ச இருக்கிற சில 'கிரேட் வன் ஒப்பீஸர்ஸ்' தங்கட பொக்கெற்றை நிரப்பிக் கொள்ளுகினமாம். முக்கியமா வடக்கு மாகாணத்தில உள்ள சில கச்சேரியளில மேல்மட்டங்களில உள்ள 'கிரேட் வன் ஒப்பீஸர்ஸ்' தாங்கள் சொந்த வாகனத்தைப் பாவிக்கிறம் எண்டு இந்த அலவன்ஸை அப்பிடியே அள்ளுகினமாம். ஆனால் உண்மையில அவை வீட்டை இருந்து ஒப்பீஸுக்கு வாறதுக்கு மட்டும் தான் தங்கட சொந்த வாகனத்தைப் பாவிக்கினம், வேலை விசயமா வெளியில போகோணும் எண்டால் ஒப்பீஸ் வாகனத்திலதான் போய்வருகினமாம். அதெப்பிடி, சொந்த வாகனத்தில வந்து போறமெண்டிட்டு, இப்பிடி ஒப்பீஸ் வாகனத்தைப் பாவிச்சால் ஓடிட்காரர் பிடிக்காயினமோ? எண்டு கனபேர் யோசிப்பியள். நீங்களே இப்பிடி யோசிக்கிறியள் எண்டால், 'கிரேட் வன் ஒப்பீஸர்ஸ்' எப்பிடி யோசிப்பினம்? அவை உதுக்கு ஒரு வழி வைச்சிருக்கினம். தங்களுக்குக் கீழ வேலை செய்யிற 'டீ.ஓ' மாரின்ர பேரில வாகனத்தைக் கொண்டுபோறதாப் பதிஞ்சு போட்டு, தாங்கள்தான் அதைக் கொண்டு போயினம். அப்பிடிச் செய்தால், வாகனத்துக்கு வாகனமும் ஆச்சுது, காசுக்குக் காசும் ஆச்சுது. உண்மையில 'டீ.ஓ' மாருக்கு ஒப்பீஸ் வாகனத்தில போய்வர அனுமதியில்லைத்தான். ஆனால் மாவட்டச் செயலர் தற்துணிவில அப்பிடி போக விடலாமாம். அந்த ரூல்ஸை வைச்சுத்தான் சிலர் குளிர் காயினம் எண்டு கதை. பாத்தியளோ மேன்மக்களின்ர விளையாட்டை?

-பட்சி

padsi@uthayan.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாலியல் தொழிலுக்கு கல்லெறிந்து கொலை

## தலிபான்கள் கொடும் சட்டம்

காபூல், ஏப்.1

பாலியல் தொழிலில் ஈடுபடும் பெண்களுக்கு எதிராக, கடும்தண்டனைவழங்க தீர்மானிக்கப்பட்டுள்ளது என்று தலிபான் தெரிவித்துள்ளது.

அவர்கள் பொது இடங்களில் கல்லெறிந்து கொல்லப்படுவர் என தலிபான்களின் அதி உயர் மட்ட தலைவர் முல்லா ஹிபத்துல்லா அகுந்தசாதா தெரிவித்துள்ளார். தற்போது பெண்கள் பாலியல் தொழிலில் அதிக அளவில் ஈடுபடுவதாகவும் அவர் கவலை வெளியிட்டுள்ளார். (எ-இ)

# அகதிகள் படகு விபத்து: எட்டுப் பேர் உயிரிழப்பு

லண்டன், ஏப்.1

மெக்ஸிக்கோ வழியாக தெற்கு பசுபிக் பெருங்கடலில் அகதிகள் சென்ற படகு கவிழ்ந்து விபத்துக்குள்ளானதில் எட்டு பேர் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளனர்.

இந்த விபத்தில் குழந்தைகள் உட்பட 8 அகதிகள் உயிரிழந்துள்ளனர் என்றும், மேலும் சிலர் காணாமற் போயுள்ளனர் எனவும் மெக்ஸிக்கோ கடலோரப் பொலிஸார் தெரிவித்தனர். காணாமற்போனோரை மீட்கும் பணிகள் தீவிரமாக இடம்பெற்று வருகின்றன என்றும் அவர்கள் தெரிவித்துள்ளனர். (எ-இ)


# ஐ.நா. அமைதிப்படை மீது எறிகணைத் தாக்குதல்!

நியூயோர்க், ஏப்.1

லெபனானின் தென்பகுதியில் இடம்பெற்ற எறிகணைத் தாக்குதலில் ஐ.நா.வின் மூன்று கண்காணிப்பாளர்களும் மொழிபெயர்ப்பாளர் ஒருவரும் காயமடைந்துள்ளனர் என்று ஐ.நா.வின் அமைதிக்காக்கும் பிரிவு தெரிவித்துள்ளது.

இஸ்ரேலின் ஆளில்லா விமானங்களே தாக்குதல் நடத்தியுள்ளன என்று லெபானான் ஊடகங்கள் தெரிவித்துள்ளன. எனினும் இஸ்ரேல் இதனை நிராகரித்துள்ளது.

தென் லெபனானைப் பிரிக்கும் ஐ.நா.வால் வரையறுக்கப்பட்ட நீலக்கோடு வழியாக ரோந்துப் பணியில் ஈடுபட்டிருந்த குழுவினருக்கு அருகில் எறிகணை வீழ்ந்து வெடித்தது என்று ஐ.நா. தெரிவித்துள்ளது. (எ-இ)




# 12 பெண் கைதிகளின் கால் கழுவிய பாப்பரசர்!

நியூயோர்க், ஏப்.1

ஈஸ்டர் தவக்காலத்தையொட்டி பாப்பரசர் பிரான்சிஸ், பெண் கைதிகளின் பாதங்களைக் கழுவி முத்தமிட்டுள்ளார்.

கடந்த வெள்ளிக்கிழமை இரவு ரோம் நகரில் உள்ள சிறைச்சாலையில் உள்ள, 12 பெண் கைதிகளின் பாதங்களைப் பாப்பரசர் பிரான்சிஸ் கழுவியுள்ளார். இயேசு கிறிஸ்து சிலுவையில் அறையப் படுவதற்கு முதல்நாள், தனது 12 சீடர்களுக்கு திருவிருந்து அளித்து அவர்களது பாதங்களைக் கழுவியதை, நினைவுகூரும் விதமாகவே இந்த நிகழ்வு இடம்பெற்றுள்ளது.

12 பெண் கைதிகளின் பாதங்களைக் கழுவியபின்னர், பாப்பரசர் பிரான்சிஸ் கைதிகளின் பாதங்களுக்கு முத்தமிட்டுள்ளார். வழக்கமாக இதற்கு முன்னர் பாப்பரசராகப் பதவி வகித்தவர்கள், வத்திக்கான் தேவாலயத்தில் இந்த நிகழ்வைக் கடைப்பிடிப்பதை வழக்கமாகக் கொண்டிருந்தனர். அதை மாற்றி பாப்பரசர் பிரான்சிஸ், முதன் முறையாக சிறையில் இந்தப் புனிதச் சடங்கை நடத்தியுள்ளார். (எ)



# இத்தாலியில் சரிவடையும் பிறப்பு வீதம்

உரோம், ஏப். 1

ஐரோப்பிய நாடான இத்தாலியில் கடந்த சில ஆண்டுகளாக குழந்தை பிறப்பு விகிதம் குறைந்து வருகிறது என்று ஆய்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. கடந்த 2022 இல் அங்கு குழந்தை பிறப்பு வீதம் 6.7 ஆக காணப்பட்ட நிலையில் 2023 இல் இது 6.4 சதவீதமாகச் சரிந்தது. இதன்மூலம் சுமார் 14 ஆயிரம் குழந்தைகள் குறைவாகப் பிறந்துள்ளன என்று கூறப்படுகிறது.

அதேசமயம் வெளிநாடுகளிலிருந்து இத்தாலிக்கு குடியேறுபவர்களின் எண்ணிக்கை 3.2 சதவீதம் அதிகரித்துள்ளது. மக்கள்தொகை வீழ்ச்சியைக் கட்டுப்படுத்த அவர்கள் உதவியாக இருக்கின்றனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது. (ச-இ)

# இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** எதிர்பாராத செலவுகள் அதிகரிக்க வாய்ப்பு உள்ளது. எதிர்பார்த்த செய்தி கிடைக்கும். மகிழ்ச்சி உண்டாகும். புதிய முயற்சிகளை தொடங்கலாம். அம்பிகையை தியானித்து வழிபட காரியங்கள் சாதகமாக முடியும்.

**இடபம்:** மனதில் அவ்வப்போது குழப்பங்கள் ஏற்பட்டு நீங்கும். எதிர்பாராத செலவுகளால் கடன் வாங்க நேரிடும். எதிர்பார்த்த காரியம் தாமதமாகும். குழப்பங்கள் ஏற்பட்டாலும், பாதிப்பு இருக்காது. வீண் செலவுகள் ஏற்படும்.

**மிதுனம்:** எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு ஆதாயம் கிடைக்கும். வீண்செலவுகள் ஏற்படும். மகிழ்ச்சி உண்டாகும். இழுபறியாக இருந்த காரியம் அனுகூலமாக முடியும். மகிழ்ச்சி அதிகரிக்கும். உற்சாகம் கிடைக்கும்.

**கடகம்:** உற்சாகமாகக் காணப்படுவீர்கள். உறவுகளால் நன்மை உண்டாகும். எதிரிகளால் ஏற்பட்ட இடையூறுகள் நீங்கும். துணிச்சலுடன் முடிவெடுக்கும் திறன் அதிகரிக்கும். கடன் திரும்பக் கிடைக்கும். நற்பலன்கள் அதிகரிக்கும்.

**சிம்மம்:** தேவையான பணம் கையில் இருக்கும். காரியங்கள் முடிவதில் தாமதம் ஏற்படும். எதிர்பார்த்த உதவி கிடைக்கும். மகிழ்ச்சி தரும் செய்தி கிடைக்கும். காரியங்களை வெற்றிகரமாக முடித்துவிட முடியும். பணிச்சுமை அதிகரிக்கும்.

**கன்னி:** உறவுகளால் பணவரவுக்கு வாய்ப்பு ஏற்படும். முக்கியமான முடிவு எடுப்பதில் பெரியவர்களின் ஆலோசனை அவசியம். உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. சில பிரச்சினைகள் ஏற்படக்கூடும்.

**துலாம்:** உற்சாகமான நாள். எதிர்பார்த்த பணம் கைக்கு வரும். செலவுகளும் ஏற்படக்கூடும். பிள்ளைகளின் விருப்பத்தை நிறைவேற்றுவீர்கள். புதிய நண்பர்களின் அறிமுகம் கிடைக்கும். லட்சுமி வழிபாடு நன்று.

**விருச்சிகம்:** காரியங்களில் சிறுசிறு தடைகள் ஏற்பட்டாலும் முடிந்துவிடும். பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. பிள்ளைகள் பிடிவாதமாக நடந்துகொள்வார்கள். விட்டுக்கொடுத்துச் செல்வது நல்லது.

**தனுசு:** காரியங்களில் அனுகூலம் உண்டாகும். எதிர்பார்த்த பணம் கிடைக்கும். திடீர் செலவுகளால் கையிருப்பு கரையும். மகிழ்ச்சி ஏற்படும். மனவருத்தங்கள் நீங்கும். ஆஞ்சநேயரை தியானித்து வழிபட நற்பலன்கள் அதிகரிக்கும்.

**மகரம்:** செயல்களில் திட்டமிடுதல் மிகவும் அவசியம். தேவையற்ற பிரச்சினைகள் ஏற்படக்கூடும். உடல் ஆரோக்கியம் மேம்படும். எதிர்பார்த்த காரியம் அனுகூலமாகும். உறவுகளுக்காகச் செலவு செய்யவேண்டி வரும்.

**கும்பம்:** சிலருக்கு புதிய ஆடை, ஆபரணங்களின் சேர்க்கை உண்டாகும். நண்பர்கள் வகையில் சில பிரச்சினைகள் ஏற்படலாம். இடையூறுகள் விலகும். பொறுமை அவசியம். ஆஞ்சநேயரை வழிபட நன்மைகள் அதிகரிக்கும்.

**மீனம்:** பணம் கைக்கு வரும். எதிர்பாராத செலவுகளும் ஏற்படக்கூடும். சிற்சில சங்கடங்களைச் சமாளிக்கவேண்டிவரும். பிள்ளைகள் பொறுப்பாக நடந்துகொள்வது மகிழ்ச்சி தரும். மனவருத்தம் ஏற்படக்கூடும்.

# சர்வாதிகார மூளை ட்ரம்புக்கு இல்லை

## அவரின் முன்னாள் ஆலோசகர் தெரிவிப்பு

வொஷிங்டன், ஏப்.1

அமெரிக்காவின் முன்னாள் ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்புக்கு சர்வாதிகாரிக்கான மூளையில்லை என அவரின் முன்னாள் ஆலோசகர் தெரிவித்துள்ளார். முன்னைய சர்வாதிகாரிகளின் குணாதிசயங்கள் ட்ரம்புக்கு உள்ளதா என்ற கேள்விக்குப் பதிலளித்த அமெரிக்காவின் முன்னாள் தேசியப் பாதுகாப்பு ஆலோசகர் ஜோன் பொல்டன், ட்ரம்பின் அறிவுசார் திறனை இழிவுபடுத்தும் விதத்தில் கருத்து தெரிவித்துள்ளதுடன் மாத்திரமல்லாமல் அவரின் தொழில்சார் பின்னணியையும் இழிவு செய்துள்ளார். "ட்ரம்ப் வர்த்தகத்தில் ஈடுபட்டுள்ளவர் மாத்திரமே என பொல்டன் தெரிவித்துள்ளார். 80க்கும் மேற்பட்ட கிரிமினல் குற்றச்சாட்டுகள், அபராதங்கள் போன்றவற்றை எதிர்கொண்டுள்ள ட்ரம்பிடம் சர்வாதிகாரிகளுக்கு அவசியமான ஒத்திசைவான அரசியல் தத்துவம் இல்லை" எனவும் அவர் தெரிவித்துள்ளார். (எ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்


மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## சுதேச மருந்துகளும் இறக்குமதியா?

மழைவிட்டும் தூவானம்விடாத கதையாக, பொருளாதார நெருக்கடி ஒருவித தணிவுநிலைக்கு வந்துவிட்டதாகச் சொல்லப்படுகின்றபோதும், அதனால் உண்டான தாக்கங்கள் இன்னும் பாரதூரமான வகையில் தொடரவே செய்கின்றன. குறிப்பாக மருந்துப்பொருள்களுக்கான தட்டுப்பாடு இன்னும் ஓய்ந்தபாடில்லை. இலங்கையின் சுகாதாரத்துறைக்கு ஒதுக்கப்பட்ட வரையறுக்கப்பட்ட நிதியை வைத்துக்கொண்டுதான், மருந்துகளை 'அளந்து அளந்து' இறக்குமதி செய்யவேண்டும். இதனால், எல்லா மருந்துவகைகளையும் மக்களின் தேவைக்கேற்ப இறக்குமதி செய்யமுடியாமல் சுகாதாரத்துறை தத்தளித்துக்கொண்டிருக்கிறது. நவீன மருத்துவத்துறையில் தான் இந்தநிலையென்று ஆயுள்வேத மருந்துவத்தை மக்கள் நாடினால், அங்கும் இதே பிரச்சினைதான் தொடர்கிறது. பெரும்பாலான ஆயுள்வேத வைத்தியநிலையங்களில் 'இங்கு இந்த மருந்து இல்லை. வெளியில் வாங்குங்கள்' என்றே கைவிரிக்கின்றனர். நவீன மருத்துவத்துறைக்கான மருந்துகள் வெளிநாடுகளில் உற்பத்தி செய்யப்படுவதால், அவற்றை இறக்குமதி செய்யப் போதிய நிதியில்லை என்று அரசாங்கம் சொல்கின்ற சாட்டினைக் கூட ஓரளவுக்கு ஏற்றுக்கொள்ளலாம். ஆனால் சுதேச மருத்துவத்துறைக்கான மருந்துகளும் இல்லையென்று சொல்வதை எப்படி ஏற்றுக்கொள்வது?

சித்த மருத்துவம், ஆயுள்வேத மருத்துவம், யுனானி மருத்துவம் என்பன இலங்கை மக்களின் பாரம்பரிய மருத்துவமுறைகளில் முதன்மையானவை. இவற்றுக்கான மருந்துத்தயாரிப்புக்கான சகல மூலிகைகளும் இலங்கையில் தாராளமாகவே உள்ளன. அத்துடன் சுதேச மருந்துகளைத் தயாரிக்கக்கூடிய தொழினுட்பமும், நிபுணத்துவம் பெற்ற ஆளணியும் இலங்கையில் இருந்தும் கூட, ஆயுள்வேத மருந்துகளுக்கு தட்டுப்பாடு என்று சொல்வதை யார்தான் ஏற்றுக்கொள்வர்? ஆனால், ஏற்றுக்கொள்ளத்தான்வேண்டும். ஏனெனில் என்னதான் சுதேச மருத்துவம் என்று இலங்கையர்கள் தமக்கான பாரம்பரிய மருத்துவமுறைக்கு சொந்தம் கொண்டாடினாலும்கூட, அவற்றுக்கான பெரும்பாலான மருந்துகளும், மூலப்பொருள்களும் இறக்குமதி மூலமே பெறப்படுகின்றன. அதனால்தான் சுதேச மருந்துகளுக்கும் இலங்கையில் தட்டுப்பாடென்பது தலைவிரித்தாடுகின்றது. உள்ளூரிலேயே மூலப்பொருள்களும், மருந்துத்தயாரிப்பில் நிபுணத்துவம் பெற்றவர்களும் இருந்தும் கூட அவற்றை ஏன் தயாரிப்பதில்லை? காரணம் வெகு எளிது. இறக்குமதி செய்தால்தான் அரசியல்வாதிகளுக்கும், அதிகாரிகளுக்கும் தரகுப்பணம் கிடைக்கும் . அதனாலேயே மருந்துகளின் உள்ளூர் உற்பத்தியை ஊக்குவிக்காமல் இறக்குமதியில் மட்டுமே அரசாங்கம் அதிக ஆர்வம் காட்டியது. அதன்பலனாகவே சுதேச மருந்துகளுக்கும் தட்டுப்பாடு உருவாகியுள்ளது.

உள்ளூரில் அதுவும் யாழ்ப்பாணத்தில்கூட சித்தமருந்துகளும், எண்ணெய்வகைகளும் உற்பத்தி செய்யப்படுகின்றன. ஆனால் அவற்றுக்கான உரிய ஆதரவும், வசதிகளும் அரசாங்கத்தால் ஏற்படுத்திக்கொடுக்கப்படுவதில்லை. அதனால் மட்டுப்பாடான உற்பத்தியை மட்டுமே மேற்கொள்ளமுடிகின்றது. சித்த மருத்துவத்துறையில் புதிய ஆராய்ச்சிகளுக்கும் இடமளிக்கப்படுவதில்லை. அதனால் அந்தத்துறை அடுத்ததளம் நோக்கி நகரமுடியாமல், இன்னமும் பழைய ஏட்டுச்சுவடிகளில் சொல்லப்பட்ட மருத்துவமுறைகளையும், மருந்துகளையும் மட்டுமே நம்பியிருக்கவேண்டிய நிலை. உண்மையில் நவீன மருத்துவத்துறையில் உள்ள பாதகமான பல அம்சங்கள் பாரம்பரியமருத்துவங்களில் கிடையாது. அத்துடன் எமது நாட்டு சீதோஷ்ணம், உணவுப்பழக்கம் என்பவற்றுக்குப் பாரம்பரிய மருத்துவமுறையே பொருத்தமானதும், பக்கவிளைவுகள் இல்லாமல் நோய்களை நிரந்தரமாகத் தீர்க்கக்கூடியதுமாகும். ஆனால் அத்தகைய நமது பாரம்பரிய மருத்துவத்துக்குக்கூட, பிறதேசங்களில் இருந்துதான் மருந்துகளை இறக்குவோம் என அடம்பிடிப்பவர்களால், நோயாளிகள் மட்டு மல்ல, குறித்த பாரம்பரிய மருத்துவத்துறையும் இறப்பு நிலை நோக்கி நகர்வதுதான் காலக்கொடுமை.




# பொருளாதார உறவுநிலை காலாண்டுகளில் மீளாய்வு

### இந்திய - இலங்கை தரப்பு தீர்மானம்

**கொழும்பு, ஏப். 1**

**இந்திய - இலங்கைக்கு இடையிலான இருதரப்புப் பொருளாதாரத் திட்டங்களின் முன்னேற்றத்தை ஒவ்வொரு காலாண்டிலும் மீளாய்வு செய்யத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.**

இந்தியாவுக்குப் பயணம் செய்துள்ள ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதி பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்க உள்ளிட்ட இலங்கையின் உயர்மட்டக் குழு, இந்திய வெளியுறவுச் செயலர் வினய் குவாத்ராவுடன் மேற்கொண்ட சந்திப்பில் இந்த விடயம் பிரஸ்தாபிக்கப்பட்டது.

இதன்போது வீழ்ச்சியடைந்துள்ள இலங்கையின் பொருளாதாரத்தை மீட்டெடுக்க இந்திய அரசாங்கம் வழங்கிய ஆதரவுக்கு நன்றி கூறிய சாகல ரத்நாயக்க, சர்வதேசநாணயநிதியத்துடனான வேலைத்திட்டத்தில் இலங்கையின் முன்னேற்ற நிலை குறித்து விளக்கமளித்தார். இலங்கையின் பொருளாதாரத்தைப் பலப்படுத்த, துரித முன்னேற்றம் அடையவேண்டும். அதற்கு இந்தியாவுடன் தற்போதுள்ள பொருளாதார ஒத்துழைப்பை பலப்படுத்த வேண்டியதன் முக்கியத்துவத்தையும் சாகல வலியுறுத்தினார். (ச-இ)

# புதிய மின்சார சட்டவரைவு இந்த மாதத்தில் மீளாய்வு!

மின்சாரசபையை மறுசீரமைப்பதற்கான புதிய மின்சார சட்டவரைவு அடுத்த இரண்டு வாரங்களில் வர்த்தமானியில் வெளியிடப்பட்டு, இம்மாத இறுதி வாரத்தில் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் என்று மின்சக்தி, எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜய சேகர தெரிவித்துள்ளார். வர்த்தமானி பிரசுரிக்கப்பட்டதன் பின்னர் மீளாய்வு செய்வதற்கு குறைந்தபட்சம் இரண்டுவாரங்கள் அவகாசம் வழங்கப்படும் என்றும் அவர் குறிப்பிட்டார். (ச-இ)

கனடாவில் கொலை

## சந்தேகநபரின் மறியல் நீடிப்பு

ஒட்டாவா, ஏப். 01

கனடாவின் தலைநகர் ஒட்டாவாவின் புறநகர்ப் பகுதியில் ஆறு இலங்கையர்கள் கொலை செய்யப்பட்ட விவகாரத்தில், கைது செய்யப்பட்ட சந்தேகநபரின் விளக்கமறியல் நீடிக்கப்பட்டுள்ளது. சந்தேகநபர் ஒட்டாவாவிலுள்ள நீதிமன்றத்தில் சூம் செயலி வழியாக முற்படுத்தப்பட்டார். இதன்போது சந்தேநபரை ஏப்ரல் 18ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டுள்ளது. (ம)

## துறைமுகங்களில் காத்திருக்கும் படகுகள்

சர்வதேசக் கடற்பரப்பில் மீன்பிடியில் ஈடுபடும் சுமார் 50 வீதமான பலநாள் படகுகள் துறைமுகங்களில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன என்று அகில இலங்கை பலநாள் படகு உரிமையாளர் சங்கம் தெரிவித்துள்ளது. (எ-இ)

# சமூகவலைத்தளங்களில் அதிகரிக்கும் வன்முறை!

சமூக வலைத்தளங்களில் பெண்களுக்கு எதிரான வன்முறைகள் அதிகரித்துள்ளன என்று கணினிக் குற்றப்பிரிவு தெரிவித்துள்ளது. இந்த வருடத்தின் இது வரையான காலப்பகுதியில் சமூகவலைத்தளங்கள் ஊடான குற்றங்கள் தொடர்பில் ஆயிரத்து 500 முறைப்பாடுகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. (ச-இ)

**நாளை**

02.04.2024

**செவ்வாய்க்கிழமை**

**பங்குனி – 20**

10.40 - 12.10

ராகுகாலம் : 03.10 - 04.40

**நாளொரு நல்வார்த்தை**

நான் தாழ்ந்தவன், நான் பாவி
என்று எப்போதும் நினைப்பவன்
அவ்வாறே ஆகிவிடுகிறான்.

– இராமகிருஷ்ண பரமஹம்சர் –

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொழுதுபோக்கற்ற சமூகம் திசைமாறிச் செல்கின்றது!

*முன்னாள் மாவட்டச் செயலர் ஸ்ரான்லி டிமெல் தெரிவிப்பு*



**மன்னார், ஏப். 1**

**கிராமங்கள் தோறும் காணப்பட்டுவந்த கரப்பந்தாட்டம் போன்ற பாரம்பரிய விளையாட்டுகள் தற்பொழுது அருகிக்கொண்டு செல்வதால் பொழுது போக்கற்ற நிலையில் வளரும் சமுதாயம் திசைமாறிச் செல்கின்றது என முன்னாள் மாவட்டச் செயலர் ஸ்ரான்லி டிமெல் தெரிவித்துள்ளார்.**


மன்னார் கரப்பந்தாட்ட லீக்கால் அண்மையில் நடத்தப்பட்ட கரப்பந்தாட்டத் தொடரின் பரிசளிப்பு விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றும் போது அவர் இவ்வாறு தெரிவித்தார். இது தொடர்பில் மேலும் தெரிவித்ததாவது:-

இன்றைய வீரர்கள் ஒரு நல்ல நிலையில் இருக்கின்றார்கள் என்றால் கடந்தகால விளையாட்டு வீரர்களின் முன்மாதிரியே இதற்குக் காரணம். இதனால் அவர்கள் போற்றப்படவேண்டியவர்களே. விளையாட்டுகளுக்கு மன்னார் எப்போதும் புகழ்பெற்றதே.

முன்னைய காலங்களில் மன்னார் மாவட்டத்தில் வேறு பொழுதுபோக்குகள் இருக்காது.

ஆனால் ஒவ்வொரு கிராமப்புறங்களிலும் கரப்பந்தாட்ட விளையாட்டே பொழுதுபோக்காக இருக்கும். ஆனால் தற்பொழுது இவைகள் அருகிப்போன நிலையில் சிறுவர்கள், இளைஞர்கள் வேறு தீய செயல்களில் நாட்டம் காட்டுகின்றனர்.

வளமான இளைஞர் சமுதாயம் உருவாக்கப்படவேண்டுமானால் கிராமங்கள் தோறும் கரப்பந்தாட்டம் போன்ற பாரம்பரிய விளையாட்டுகளைக் கட்டியெழுப்ப வேண்டும். கல்வியைப்போல் நாங்கள் விளையாட்டு களுக்கும் முக்கியத்துவம் கொடுக்க வேண்டும் - என்றார். (ம-60)



## இலங்கையிலுள்ள 108 சிவாலயங்களையும் ஆவணப்படுத்த முயற்சி!

யாழ்ப்பாணம், ஏப்.1

சைவத் திருக்கோயில்களை ஆவணப்படுத்தும் நிகழ்ச்சித் திட்டத்தின் ஓர் அங்கமாக, இலங்கையிலுள்ள 108 சிவாலயங்களை எதிர்வரும் சித்திரைப் புத்தாண்டுக்கு முன்னதாக ஆவணப்படுத்தும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

'தமிழ்ச் சைவம்' எனும் செயலியில் இந்த ஆவணப்படுத்தல் முயற்சி மேற்கொள்ளப்பட உள்ளதாகவும், எனவே, தங்களுக்குத் தெரிந்த சிவாலயங்களின் வரலாறுகளைத் தந்துதவுமாறும் செயலியைச் செயற்படுத்தும் தமிழ்ச் சைவப் பேரவையினர் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

சிவன் கோவில்களை முதற்கட்டமாக ஆவணப்படுத்தும் முயற்சிக்குத் தகவல்களை சிவப் பிராந்திய ரீதியாக தொகுத்து வழங்கினால் சிறப்பாக அமையும் என்பதால், திருகோணமலை, பொலநறுவை மாவட்டங்களை உள்ளடக்கிய திருகோணமலை சிவப்பிராந்தியம், யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்டங்களை உள்ளடக்கிய யாழ் சிவப்பிராந்தியம், மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களை உள்ளடக்கிய மட்டு சிவப்பிராந்தியம், முல்லைத்தீவு, மன்னார், வவுனியா, அநுராதபுரம் மாவட்டங்களை உள்ளடக்கிய வன்னி சிவப்பிராந்தியம், நுவரெலியா, கண்டி, மாத்தளை மாவட்டங்களை உள்ளடக்கிய நுவரெலியா சிவப்பிராந்தியம், பதுளை, இரத்தினபுரி, மொனராகலை மாவட்டங்களை உள்ளடக்கிய பதுளை சிவப்பிராந்தியம், கொழும்பு, கம்பஹா, களுத்துறை, கேகாலை மாவட்டங்களை உள்ளடக்கிய கொழும்பு சிவப்பிராந்தியம், புத்தளம், குருநாகல், சிலாபம் மாவட்டங்களை உள்ளடக்கிய சிலாபம் சிவப் பிராந்தியம், காலி, மாத்தறை, அம்பாந்தோட்டை மாவட்டங்களை உள்ளடக்கிய காலி சிவப்பிராந்தியம் ஆகிய ஒன்பது சிவப்பிராந்தியங்களின் கீழுள்ள சிவாலயங்களின் வரலாறுகளைத் தந்துதவுமாறும் தமிழ்ச்சைவப் பேரவையினர் கோரிக்கை விடுத்துள்ளனர். (ம-66)

## மெய்வன்மைப் போட்டி

யாழ்ப்பாணம், ஏப்.1

வரணி மத்திய கல்லூரியின் இல்ல மெய்வன்மைத் திறனாய்வுப் போட்டி, அதிபர் ஆ.தங்கவேலு தலைமையில் கல்லூரி மைதானத்தில் நாளை செவ்வாய்க்கிழமை பி.ப. 1.30 மணிக்கு இடம்பெறவுள்ளது.

நிகழ்வில் பிரதம விருந்தினராக தென்மராட்சிக் கல்வி வலய உடற்கல்விப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் பிரதீபா கிருஷ்ண பிள்ளை, சிறப்பு விருந்தினராக தென்மராட்சி கல்வி வலயக் கணக்காளரும் பழைய மாணவியுமான திருமதி சுதர்சினி சதீஷ்கண்ணா, கௌரவ விருந்தினராக ஸ்ரிபன் ஜெயராஜ் விமலேந்திரநாதன் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். (ப-159)

## நிர்வாகத் தெரிவு!

சங்கானை, ஏப்.1

சங்கானைப் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட, அராலி மேற்கு, ஜே/160 கிராம சேவகர் பிரிவுக்கான வின்ஸ்டார் இளைஞர் கழகத்தின் புதிய நிர்வாகத் தெரிவு, ஜே/160 கிராம சேவகர் அலுவலகத்தில் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை நடைபெற்றது.

இதன்போது தலைவராக செ.செந்தூரன், செயலாளராக ம.சுகிர்தா, பொருளாளராக சி.நிலைக்சன், உப தலைவராக வி.நிலக்சனா, உப செயலாளராக ஜெ. அஜந்தா, அமைப்பாளராக பா.பிரதீப் ஆகியோர் நிர்வாக உறுப்பினர்களாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

கூட்டத்தில் யாழ்.மாவட்ட தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் உதவிப் பணிப்பாளர் திருமதி வினோதினி, ஜே/160 கிராம சேவகர் சிந்துஜன், சங்கானைப் பிரதேச இளைஞர் சேவைகள் உத்தியோகத்தர் மதன்ராஜ், மாவட்ட சம்மேளன உத்தியோகத்தர்கள் மற்றும் இளைஞர், யுவதிகள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (ப-27)



## நோன்பு திறப்பு நிகழ்வு

யாழ்ப்பாணம், ஏப்.1

யாழ். முஸ்லிம் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் இஸ்லாமிய மக்களின் நோன்பு திறப்பு நிகழ்வு, மன்னித் முஹம்மதியா பள்ளிவாசலில் கடந்த வியாழக்கிழமை நடைபெற்றது.

குறித்த பள்ளிவாசலின் தலைவரும் சமாதான நீதவானுமான பி.எஸ்.எம். சரபுல் அனாம் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் பிரதம அதிதியாகக் கடற்றொழில் அமைச்சர் கே.என். டக்ளஸ் தேவானந்தா, விருந்தினர்களாக யாழ்.மாவட்ட பதில் செயலர் ம.பிரதீபன், யாழ்.பிரதேச செயலாளர் சா.சுதர்சன், யாழ்.மாநகர ஆணையாளர், இஸ்லாமிய உறுப்பினர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (ப-20)

# கிளி. பொதுச்சந்தையில் சுகாதாரச் சீர்கேடுகள்

## தண்ணீர் வசதி ஏற்படுத்தப்படவேண்டும் வணிகர்கள், பொதுமக்கள் கோரிக்கை

கிளிநொச்சி, ஏப்.1

கிளிநொச்சி மாவட்ட கரைச்சிப் பிரதேச சபைக்குட்பட்ட கிளிநொச்சி பொதுச்சந்தையில் தண்ணீர் வசதிகள் இல்லாததால் கடுமையான சுகாதாரச் சீர்கேடுகள் காணப்படுகின்றன என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இது தொடர்பில் சந்தையில் உள்ள வணிகர்கள் தெரிவித்ததாவது:

இறைச்சிக்கடை, மீன்கடை போன்றவை காணப்படும் அந்தச் சந்தையில் சீரான தண்ணீர் விநியோகம் இல்லை. இதனால், தூய்மைப் பணிகளை திறம்பட மேற்கொள்ளமுடியாத நிலை வர்த்தகர்களுக்கு ஏற்பட்டுள்ளது. இது சுகாதாரச் சீர்கேடுகளுக்கும் வழிவகுத்துள்ளது. தண்ணீர் இல்லாத்தமையால் இலையான்களின் பெருக்கம் ஏற்பட்டுள்ளதுடன், மனித நுகர்வுக்கு ஒவ்வாத இடமாக பொதுச்சந்தை மாறிக்கொண்டிருக்கின்றது. இதனால் எமக்கான வாடிக்கையாளர்களின் எண்ணிக்கையில் சடுதியான வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது. எனவே அதிகாரிகள் உரிய கவனமெடுத்து தண்ணீர் வசதியை சீரான முறையில் ஏற்படுத்தித் தரவேண்டும் - என்றனர். (ம-113)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கொடிகாமம் அஞ்சல் அலுவலக காணியிலுள்ள பழைய வீடு விற்பனைக்குண்டு

A9 வீதி கொடிகாமம் புகையிரத நிலையத்துக்கு முன்பாக உள்ள காணி விற்பனைக்குண்டு. அக்காணியில் உள்ள புதிய கட்டடத்தில் கொடிகாமம் அஞ்சல் அலுவலகம் இயங்குகிறது. அதன் பக்கத்தில் 53' x 30' அளவுள்ள பழைய வீடு புதிய கட்டடம் அமைப்பதற்காக அகற்ற வேண்டியுள்ளது. பழைய வீடு, கூரை, கட்டடம் முழுமையாக விற்பனைக்குண்டு.

தம்பு கந்தையா
மருதடிப்பிள்ளையார் கோவிலடி, கச்சாய் வீதி, கொடிகாமம்.
**077 608 1026**

## சேவை நயப்பு விழா

உடுத்துறை மகா வித்தியாலயத்தில் அதிபராகக் கடமையாற்றி இன்றுடன் ஓய்வுபெறும் வீரகத்தி இந்திரலிங்கத்தைக் கௌரவிக்கும் சேவை நயப்பு விழா இன்று நடைபெறவுள்ளது. உடுத்துறை மகா வித்தியாலயத்தின் பிரதி அதிபர் கணபதிப்பிள்ளை திரவியகுமார் தலைமையில் பாடசாலை பிரதான மண்டபத்தில் முற்பகல் 11.30 மணியளவில் இந்நிகழ்வு இடம்பெறும். (ஒ-இ)




## சாவகச்சேரி பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் (வரையறுக்கப்பட்டது)
## கிளைக்குழு உறுப்பினர் தெரிவு தொடர்பான அறிவித்தல்

1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க மாகாண சபைகள் (இடைநேர் விளைவுகள் ஏற்பாடுகள்) சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் 1992 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க திருத்தச் சட்டத்தாலும் 1989 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க திருத்தச் சட்டத்தாலும் திருத்தம் செய்யப்பட்ட 1972 ஆம் ஆண்டின் 5ஆம் இலக்க கூட்டுறவுச் சங்கங்கள் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ் யாழ்ப்பாணம் மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளராகக் கடமை புரியும் திரு கிறகோரி சந்திரசேகரன் ஆகிய எனக்கு கையளிக்கப்பட்டு 2021.07.01ஆம் திகதிய 2234/39 ஆம் இலக்கமுடைய இலங்கை சனநாயக் சோஷலிசக் குடியரசின் அதிவிசேட அரச வர்த்தமானி மூலமாக வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களிற்கு அமைவாக மேற்படி சங்கத்தின் 10 கிளைக்குழு தெரிவிற்கான கிளைப் பொதுச்சபை கூட்டங்கள் பின்வரும் கால அட்டவணையின் படி நடைபெறுவதற்காக இக் கூட்டங்களை அழைப்பதற்கும் அவற்றின் தவிசாளராகக் கடமையாற்றுவதற்கும் பின்வரும் அலுவலர்களைப் பெயர் குறித்து நியமித்துள்ளேன்.

* அதற்கு அமைய இக் கூட்டங்களிற்கு சமுகமளிதது வாக்களிக்க உரிமையுள்ள உறுப்பினர்களுக்குத் தனித்தனி அறிவித்தல் சம்பந்தப்பட்ட அலுவலர்களினால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.
* கிளைப் பொதுச் சபைக் கூட்டத்திற்கான நிறைவெண் கூட்டத்திற்கு சமுகமளித்து வாக்களிக்க தகுதியுள்ள உறுப்பினர்களில் நான்கிலொரு (1/4) பங்கினர் அல்லது 25 பேர் அதில் எது குறைவோ அத்தொகையாகும்.
* தவிசாளர் குறித்த கிளையின் பொதுச்சபையில் இருந்து கிளைக்குழுவிற்கான ஒன்பது (09) உறுப்பினர்களை தெரிவு செய்யும்படி கிளையின் பொதுச் சபையைக் கோருவார் இதில் இருவராவது 18-35 வயதிற்கு இடைப்பட்டவராக இருத்தல் வேண்டும்.
* சபையில் இருந்து கிடைக்கப்பெறும் முன்மொழிவுகள் 09 பேருக்கு மேற்படின் தவிசாளர் இரகசிய வாக்கெடுப்பின் மூலம் தெரிவு மேற்கொள்ளுவார். இரண்டு வேட்பாளருக்கு அல்லது
* இரண்டிற்கும் மேற்பட்ட வேட்பாளருக்கிடையே சம வாக்குகள் கிடைக்கப் பெறும் பட்சத்தில் திருவுளச் சீட்டு மூலம் தெரிவு மேற்கொள்ளப்படும்.
* தெரிவு செய்யப்பட்டவர்களின் பெயர்களைத் தவிசாளர் கிளையின் பொதுச்சபையிற் பிரகடனப்படுத்துவதுடன் சங்க செயலாளருக்கும் ஆணையாளருக்கும் எழுத்து மூலம் அறிவிப்பார்.

### கிளைப் பொதுச்சபைக் கூட்டங்கள் தொடர்பான விபரங்கள்
### கிளைப் பொதுச்சபைக் கூட்டங்கள் நடைபெறும் திகதியும் காலமும் 2024.04.06 சனிக்கிழமை முற்பகல் 10.00 மணி

| தொடர் இல. | கிளை இல | கிளையின் பெயர் | கூட்டம் நடைபெறும் இடங்கள் | தவிசாளர்கள் |
|---|---|---|---|---|
| 01 | 185-187 | தச்சன்தோப்பு - மறவன்புலோ | காந்தி சனசமூக நிலையம் | திரு.அருளானந்தம் தனுசன் |
| 02 | 188-189-204 | கைதடிச் சந்தி - கைதடி மேற்கு - கைதடி மத்தி | கைதடி தெற்கு சனசமூக நிலையம் | திரு.வினாசித்தம்பி சிவபாலன் |
| 03 | 190 | கைதடி வடக்கு | செல்வா சனசமூக நிலையம் | திரு.சண்முகநாதன் ரதிகுலன் |
| 04 | 191 | கைதடி நுணாவில் | வளர்மதி சனசமூக நிலையம் | திரு.கனகரத்தினம் வக்சன் |
| 05 | 192 | மகிழடி | சோமஸ்கந்தா சனசமூக நிலையம் | திரு.இரத்தினராசா கஜந்தன் |
| 06 | 193 | சந்திரபுரம் | அம்பாள் சனசமூக நிலையம் | திரு. அமிர்தானந்தசிவம் சஞ்சயன் |
| 07 | 198 | பெருங்குளம் சந்தி | சங்கத்தின் போத்தலடைப்பு நிலையம் | திரு.சிவசிதம்பரம் சிறிதரன் |
| 08 | 199 | கனகன்புளியடி | சங்கத்தின் வாகனத் தரிப்பிடம் | திரு.இராஜசிவம் தனுசன் |
| 09 | 201 - 202 | வேம்பிராய் இராமாவில் | சங்கத்தின் கூட்ட மண்டபம் | திரு.சிங்கராசா சியாந்தன் |
| 10 | 206 | கச்சாய் | சாவகச்சேரி கிழக்கு முன்பள்ளி | திரு.தங்கராசா கண்ணதாசன் |

### கிளைக்குழு உறுப்பினராகத் தெரிவு செய்யப்படத் தகுதியற்றவர்கள்

01. கிளையினது வாக்காளர் பட்டியலில் பெயர் காணப்படாத ஒருவர்
02. 18 வயதிற்குக் கீழ்ப்பட்டவர்
03. உடன் முன் சென்ற 03 ஆண்டுகளுக்குள் தீய ஒழுக்கச் செயலுக்காக குற்றவாளியென தீர்மானிக்கப்பட்டவர் அல்லது மூன்று மாதங்களுக்கு மேற்பட்ட சிறைத்தண்டனைக்கு தீர்ப்பளிக்கப்பட்டவர்.
04. கடனைத்தீர்க்க வகையற்றவர் எனப்பிரகடனஞ் செய்யப்பட்டவர் அல்லது அவ்வாறு ஒரு வழக்கில் தீர்ப்பளிக்கப்பட்டவர்.
05. இச்சங்கத்திற்கு அல்லது பதிவு செய்யப்பட்ட வேறு எக் கூட்டுறவுச் சங்கத்திற்கும் எக் கடனையாவது திருப்பிக்கொடுக்காதவர் அல்லது வேறு எந்த விதத்திலும் தவறு செய்தவர்.
06. இச் சங்கத்தில் வியாபாரி எனப் பதியப்பட்டவர் அல்லது சங்கத்தின் நலவுரிமைகளுக்கு முரண்பட்ட முறையில் வியாபாரத்தினை நடாத்துபவர்.
07. சங்கத்தின் ஆதாயம் தரும் ஏதாவது ஒரு பதவியை அல்லது இடத்தினை வகிப்பவர் அல்லது ஆணையாளரின் முன் அனுமதி இன்றி ஏதாவது தகைமைக் கொடையை பெறுபவர்.
08. இச் சங்கத்தில் அல்லது இச் சங்கம் உறுப்புரிமை வகிக்கும் வேறு எச்சங்கத்திலும் ஊதியம் பெறும் ஊழியராய் இருப்பவர்.
09. ஓர் உறுப்பினர் என்ற முறையில் தவிர மற்றப்படி சங்கத்துடன் செய்யப்பட்டிருக்கும் எந்த ஒப்பந்தத்திலோ அல்லது சங்கத்தினால் செய்யப்படும் எந்த விற்பனவிலோ கொள்வனவிலோ அல்லது சங்கத்தின் நிதியோடு சம்பந்தப்பட்டு அதனால் செய்யப்படவிருக்கும் அல்லது பேரப்பேச்சளவில் இருக்கும் ஏதாவது ஒப்பந்தத்தில் அல்லது கொடுக்கல் வாங்கலில் மறைமுகமாகவோ அக்கறை கொண்டு இருப்பவர்.
10. கூட்டுறவுச் சட்டத்தின் படி இயற்றப்பட்ட விதிகளுக்கமைய தனது பதவியை அல்லது வேலையை கடந்த ஐந்து ஆண்டுகளுக்குள் விட்டகல வேண்டிய நிலைக்குள்ளானவர்.
11. இயக்குநர் சபையினால் அல்லது கிளை நிர்வாக சபையினால் உறுப்பினராக கருத்தில் எடுத்துக்கொள்ளப்படாத அல்லது மேன்முறையீடு இயக்குநர் சபையினால் அல்லது கூட்டுறவுச் சங்கங்களின் சட்டத்தின் பிரிவு 6(2) இன் கீழ் ஆணையாளரால் மீளாய்வு மூலம் அல்லது இவ்விதியின் 24 அல்லது 26 இன் கீழ் வாக்காளர் அட்டவணையில் பெயர் சேர்க்கப்படாத ஒருவர்.
12. பாராளுமன்ற உறுப்பினர்கள் மாகாணசபை உறுப்பினர்கள் மாநகரசபை உறுப்பினர்கள் பிரதேச சபை உறுப்பினர்கள்
13. அங்கத்தவராக சேர்ந்து ரூபா 100/= ஐப் பங்குப்பணமாகச் செலுத்தி முடிக்காதவரும் அங்கத்தவராகச் சேர்ந்து ஒருவருடம் முழுமையடையாதவருமான ஒருவர்.

கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் அலுவலகம்
இல 857. கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம்.


திரு.கி.சந்திரசேகரன்
கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர்,யாழ்ப்பாணம்.

(cr.42113) (N-1)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

## கந்தையா சகாதேவன்



மணகும்பான் வேலணையைப் பிறப்பிடமாகவும், வவுனியா உக்குளாங்குளத்தை வதிவிடமாகவும் கொண்ட கந்தையா சகாதேவன் கடந்த 29.03.2024 வெள்ளிக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா - இரத்தினம் தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான வேலாயுதபிள்ளை - வள்ளியம்மை தம்பதியரின் அன்பு மருமகனும், இராசலட்சுமியின் அன்புக் கணவரும், வாசுகி (பிரான்ஸ்), ஜனார்த்தனன் (பிரான்ஸ்), வானதி (சுவிஸ்), நிசாந்தன் (இலங்கை), யாழினி (லண்டன்), ஆகியோரின் பாசமிகு தந்தையும், ஜெயபாலரட்ணம் (பிரான்ஸ்), யசோதினி (பிரான்ஸ்), சுதானந்தன் (சுவிஸ்), வைதேகி (இலங்கை), ஜனார்த்தனன் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு மாமனாரும், காலஞ்சென்றவர்களான இராசலட்சுமி, புஸ்பவதி, பாலச்சந்திரன், சாந்தலட்சுமி, பத்பநாபன் ஆகியோரின் அன்புச் சகோதரரும், பாலசிங்கம், காலஞ்சென்ற பாக்கியலட்சுமி மற்றும் நல்லம்மா, இராசகோபால் (லண் டன்), பரமலிங்கம் (ஜேர்மன்), தர்மலிங்கம் (பிரான்ஸ்), பரமசிவம் (சிறி மதனா ஜுவலரி - இலங்கை), காலஞ்சென்றவர்களான தளயசிங்கம், சண்முகம், நாகேஸ்வரி, காசிவிஸ்வநாதர் மற்றும் நல்லம்மா, பாக்கியலட்சுமி, காலஞ்சென்ற நவரத்தினம் மற்றும் மாலினி (லண்டன்), இந்திராணி (ஜேர்மன்), காலஞ்சென்ற கிருசாம்பாள் (பிரான்ஸ்) மற்றும் மாலினி (இலங்கை) ஆகியோரின் மைத்துனரும், சோபி (பிரான்ஸ் - Doctor), அரிகரன் (பிரான்ஸ்), அட்சயா (பிரான்ஸ்), சுகிர்ஷன் (சுவிஸ் - Chemistry Development Technician), சுதர்ஷிகா (சுவிஸ்), ஸ்ரீஹரி (இலங்கை), ஜஸ்விகா (இலங்கை), ஜக்ஷனா (லண்டன்) ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (02.04.2024) செவ்வாய்க்கிழமை வவுனியாவிலுள்ள அவரது இல்லத்தில் காலை 7.00 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் தனக்கிரியைக்காக வேலணை சாட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.


தோற்றம்
05.06.1950

மறைவு
29.03.2024

302/2, 3 ஆவது ஒழுங்கை,
உக்குளாங்குளம்,
வவுனியா.
(இலங்கை)

தகவல்:
குடும்பத்தினர்
நிசாந்தன் - மகன் - 0094 7718 00015
0094 2420 50850

# கண்ணீர் அஞ்சலி



மணகும்பான் வேலணையைப் பிறப்பிடமாகவும்,
வவுனியா உக்குளாங்குளத்தை
வதிவிடமாகவும் கொண்ட

## கந்தையா சகாதேவன்

அவர்கள் 29.03.2024 வெள்ளிக்கிழமை காலமான
செய்தி அறிந்து மிகுந்த வேதனை அடைவதோடு,
அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் அவரின்
குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத்
தெரிவித்துக்கொள்வதுடன் அன்னாரின் பிரிவுத்
துயரிலும் பங்குகொள்கின்றோம்.
மேலும் அன்னாரின் ஆத்மா சாந்தி அடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**ஓம் சாந்தி ! ஓம் சாந்தி !! ஓம் சாந்தி!!!**

**உரிமையாளரும் குடும்பத்தினரும்**

**சிறி மதனா நகைமாளிகை**
இல.155 M, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
021 222 7772

**மதனா நகைமாடம்**
70, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
021 222 5526

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சென்னைக்கு முதல் தோல்வி டோனியின் அதிரடி வீண்

நடப்பு ஐ.பி.எல். தொடரில் பெங்களூர் மற்றும் குஜராத் அணிகளை இலகுவாக வென்ற சென்னை சுப்பர் கிங்ஸ் அணி டெல்லி அணியிடம் 20 ஓட்டங்களால் நேற்றுத் தோல்வியைச் சந்தித்தது.





விசாகப் பட்டினத்தில் நடைபெற்ற ஆட்டத்தில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற டெல்லி அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது. அந்த அணிக்கு பிரித்வி சா மற்றும் டேவிட் வோனர் இணை சிறப்பான ஆரம்பத்தை கொடுத்தது. சென்னையின் பந்து வீச்சை துவம்சம் செய்தனர். பத்திரன பந்து வீச அழைக்கப்பட்ட பின்னர் ஆட்டம் மாறியது. டேவிட் வோனர் 35 பந்துகளில் 52 ஓட்டங்களுடன் பத்திரனவின் அபார பிடியெடுப்பில் ஆட்டமிழந்தார். 27 பந்துகளில் 43 ஓட்டங்களுடன் பிரித்வி சாவும் ஆட்டமிழந்தார். பத்திரன ஒரே பந்துப் பரிமாற்றத்தில் 'யோக்கர்' பந்து மூலம் இரண்டு இலக்குகளைச் சாய்த்தாலும் அணித் தலைவர் ரிசப் பந்த் இறுதி வரை அதிரடி காட்டி 32 பந்துகளில் 51 ஓட்டங்களைக் குவித்து பத்திரனவின் பந்து வீச்சில் ஆட்டமிழந்தார். அந்த அணி 20 பந்துப் பரிமாற்றங்களில் 5 இலக்குகளை இழந்து 191 ஓட்டங்களைக் குவித்தது. பந்து வீச்சில் பத்திரன 3 இலக்குகளைக் கைப்பற்றினார்.

பதிலளித்து ஆடத் தொடங்கிய சென்னை அணிக்கு ஆரம்பத்திலிருந்தே அதிர்ச்சி கொடுத்தது டெல்லி. சீரான இடைவெளியில் இலக்குகள் சரிந்து கொண்டேயிருந்தன. ரஹானே 30 பந்துகளில் 45 ஓட்டங்களைப் பெற்றுக் கொடுத்தார். டெல்லி பக்கம் ஆட்டம் சாய்ந்து கொண்டிருந்த நிலையில் டோனி களமிறங்கினார். அரங்கம் ஆர்ப்பரித்த நிலையில் முதலாவது பந்தை எதிர்கொண்ட டோனி அதை 4 ஓட்டங்களாக மாற்றி அதிரடியைத் தொடக்கினார். இருப்பினும் டோனியால் முழுமையாக ஆட்டத்தை கையிலெடுக்க முடியவில்லை. இறுதியில் 16 பந்துகளில் 3 ஆறு ஓட்டங்கள் 4 நான்கு ஓட்டங்கள் அடங்கலாக 37 ஓட்டங்களை ஆட்டமிழக்காமல் பெற்றார். 20 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் சென்னை 171 ஓட்டங்களைப் பெற்றது. பந்து வீச்சில் முகேஷ் குமார் 3 இலக்குகளைக் கைப்பற்றினார். (ஒ-5)


**வீடு விற்பனைக்கு**

கப்பம்புலம், புன்னாலைக் கட்டுவன் வடக்கு, பாரதி வீதியில் 2 1/2 பரப்புக் காணியில் அமைந்துள்ள 04 அறை, சமயலறை, வரவேற்பு அறை, குளியலறை கொண்ட வீடு விற்பனைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு: 077 8449687




**வருடாந்த பொதுக்கூட்ட அறிவித்தல்**

தெல்லிப்பளை கூட்டுறவு வைத்தியசாலையின் வருடாந்த பொதுக்கூட்டம் 28.04.2024 ஆந் திகதி நடாத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. இப் பொதுக் கூட்டத்தில் பிரேரணைகள் சமர்ப்பிக்க விரும்புபவர்கள் 08.04.2024 ஆந் திகதிக்கு முன்னர் சமர்ப்பிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

தலைவர்
தெல்லிப்பளை கூட்டுறவு வைத்தியசாலை,
தெல்லிப்பளை.


# குஜராத்துக்கு இலகு வெற்றி



சன்ரைசஸ் அணியுடனான நேற்றைய ஆட்டத்தில் 7 இலக்குகள் வித்தியாசத்தில் இலகுவாக வெற்றியைப் பெற்றது குஜராத்.

ஐ.பி.எல். தொடரின் 12ஆவது ஆட்டம் அஹமதாபாத்தில் நடைபெற்றது. நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற சன்ரைஸஸ் அணி முதலில் துடுப்பெடுத்தாடியது. மும்பையை பிளந்துகட்டிய அதே வேகத்தில் ஆட்டத்தை அந்த அணி தொடங்கினாலும் குஜராத்தின் மத்திய பந்து வீச்சுப் பரிமாற்றங்களில் சீராக இலக்குகளை இழந்து 20 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் 8 இலக்குகளை இழந்து 162 ஓட்டங்களைப் பெற்றது. அந்த அணி சார்பில் 29 ஓட்டங்களை அதிகபட்சமாக அபிசேக் சர்மா மற்றும் அப்துல் சமாட் ஆகியோர் பெற்றனர். பந்து வீச்சில் மோகித் சர்மா 3 இலக்குகளைக் கைப்பற்றினார்.

பதிலளித்து ஆடிய குஜராத் அணி சீராக ஆடி 19.1 பந்துப் பரிமாற்றத்தில் 3 இலக்குகளை இழந்து வெற்றியிலக்கை அடைந்தது. சாய் சுதர்சன் 45 ஓட்டங்களையும், மில்லர் 44 ஓட்டங்களையும் பெற்றுக் கொடுத்தனர். ஆட்டநாயகனாக மோகித் சர்மா தெரிவுசெய்யப்பட்டார். (ஒ-5)


**முதலாம் ஆண்டு நினைவஞ்சலி**



தோற்றம் 01 . 03 . 1944
மறைவு 12 . 04 . 2023

**அமரர் மார்க்கண்டு குமாரசாமி**
(ஓய்வுநிலை பிரதம மருந்தாளர் - யாழ். போதனா வைத்தியசாலை)

தீராத துயரினைத் தந்து மீளாத் துயிலில்
ஆழ்ந்த எங்கள் அன்புத் தெய்வமே
நீங்கள் மறைந்து ஆண்டு ஒன்று
கழிந்தாலும் மாறாது உங்கள் நினைவுகள்
வேதனையால் தவிக்கின்றோம்
உங்கள் அன்பும் பாசமும்
எங்களை வாழ வழிகாட்டும்
நம்பிக்கையுடன் வாழ்கின்றோம்.

என்றும் உங்கள் நினைவுகளுடன்
குடும்பத்தினர்

(CS/5576) N-1



சிறி அமலாவின்... சிறிராம்
சிறிராம் ஜுவல்லர்ஸ்



எங்குமே இல்லாத விலைக்குறைப்பு
ஒருமுறை வந்து பாருங்கள் ஒத்துக் கொள்வீர்கள்
உங்கள் மனதிற்குப் பிடித்த கண்கவர் ஆபரணங்களை அனைத்து நிறைகளிலும் எண்ணற்ற டிசைன்களிலும் எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம்

P.T: 077 1651729, 021 222 8334, 077 7730567


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஊரெழுவில் குருதிக்கொடை



யாழ்., ஏப். 1 ஊரெழு பூரண நிலையத்தினரின் ஏற்பாட்டில் குருதிக் கொடை முகாம் இன்று முதலாம் திகதி திங்கட்கிழமை காலை 8.30 மணி முதல் பிற்பகல் 3 மணி வரை நிலைய மண்டபத்தில் நடைபெற வுள்ளது. குருதிக்கொடை முகாமில் ஆர்வலர்கள் பங்கேற்று குருதிக் கொடையளிக் குமாறு ஏற்பாட்டாளர்கள் கேட்டுள்ளனர்.

(ச-66)

## மரண அறிவித்தல்



### துரைசிங்கம் பரமேஸ்வரி

பிறப்பு 14.04.1954 — இறப்பு 30.03.2024

கண்ணகைபுரம் ஸ்கந்தபுரம் கிளிநொச்சியைப் பிறப்பிட மாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட துரைசிங்கம் பரமேஸ்வரி நேற்றுமுன்தினம் (30.03.2024) சனிக் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான முத்துப்பிள்ளை - அம்பலம் தம்பதியரின் அன்பு மகளும், துரைசிங்கம் அவர் களின் அன்பு மனைவியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (01.04.2024) திங்கட்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கண்ணகைபுரம் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப் படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல. 113, கண்ணகைபுரம்
ஸ்கந்தபுரம், கிளிநொச்சி.

தகவல்:
குடும்பத்தினர்
077 961 2748

## மரண அறிவித்தல்

தோற்றம் 07 ... 06 ... 1942



மறைவு 31 ... 03 ... 2024

### திரு.சரவணமுத்து ஆறுமுகம்

(தாவடி)
(ஓய்வு பெற்ற ஊழியர் - யாழ்.மாநகரசபை)

தெல்லிப்பளையைப் பிறப்பிடமாகவும், தாவடி தெற்கை வசிப்பிடமாகவும் கொண்ட திரு.சரவணமுத்து ஆறுமுகம் அவர்கள் நேற்று (31.03.2024) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சரவணமுத்து - நல்லம்மா தம்பதியரின் இளைய மகனும், காலஞ்சென்ற குமாரசுவாமி மற்றும் சிவபாக்கியம் ஆகியோரின் அன்புச் சகோதரரும், காலஞ்சென்ற செல்லத்துரை, ஆச்சிப்பிள்ளையின் மூத்த மருமகனும், காலஞ்சென்ற கமலேஸ்வரியின் அன்புக் கணவரும், பிரதீபன் (யாழ்.மாநகரசபை), பிருந்தாபன் (ஆசிரியர், யா/இந்துக் கல்லூரி), பிரகலாதன் (பிரான்ஸ்), பிரவீந்தன் (லண்டன்), பிரசாந்தன் (கனடா) ஆகியோரின் பாசமிகு தந்தையும், கேஷனா, ஜனனி, தர்மினி, சுபாஜினி, அனுஷியா ஆகியோரின் பாசமிகு மாமனாரும், றபீசன், றாகீசன், றணுயன், யருசன், ஆரோன், ஐடன், அக்சயன், றாகவி, ஆருஸ், ஈஸ்வரி, ஈழவன் ஆகியோரின் பாசமிகு அப்பப்பாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை மறுதினம் (03.04.2024) புதன்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக தாவடி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

22, முருகமூர்த்தி கோவிலடி,
பத்தானை வீதி, தாவடி தெற்கு,
கொக்குவில்.

தகவல்:
குடும்பத்தினர்.
077 255 0807

(CS 28392) S-1

## விண்ணக வாழ்வின் 14 ஆம் ஆண்டு நினைவுகள்

மலர்வு 19 . 03 . 1937



உதிர்வு 01 . 04 . 2010

### அமரர் மேரி யோசப்பின் பாக்கியநாதர்

(இளைப்பாறிய ஆசிரியை)

" ஆண்டவர் என் ஆயர் எனக்கேதும் குறையில்லை
பசும்புல் வெளிமீது என்னை அவர் இளைப்பாறச் செய்வார்"
(தி.பா.23.1,2)

அன்புடனும் நன்றியுடனும் நினைவுகூரும்

கணவர்,
பிள்ளைகள் - றெஜி, றொகான், றதீஸ்குமார்,
மருமகள்கள், பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்.

"மரியன்ஸ்"
கல்லூரி வீதி,
மானிப்பாய்.
077 635 9240

## மரண அறிவித்தல்

தோற்றம் 27 . 02 . 1934



மறைவு 30 . 03 . 2024

### திருமதி சந்தியாப்பிள்ளை மரியம்மா

புதிய செம்மணி வீதி, கல்வியங்காட்டைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சந்தியாப்பிள்ளை மரியம்மா அவர்கள் நேற்று முன்தினம் (30.03.2024) சனிக்கிழமை இறைபதமடைந்து விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சவரிமுத்து சந்தியாப்பிள்ளையின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான அந்திரேசு - அருளம்மா தம்பதியரின் பாசமிகு மகளும், காலஞ்சென்ற சவரிமுத்து - மரியமாணிக்கம் தம்பதியரின் மருமகளும், ரஞ்சினி, அருட்சகோதரி பத்மினி (நல்லாயன் சபை), லலாயினி, ரோகினி, பவானி, மெலானி (ஜேர்மனி), ரெனி, லைவலின் (கனடா), சுபாஷினி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தாயாரும், காலஞ்சென்றவர்களான அன்ரனிக்கம்மா, திரேசம்மா, நேசம்மா, ஜெயசீலி, அருள்சீலி, பிரான்சிஸ்கம்மா, பத்திநாதர் ஆகியோரின் சகோதரியும், மரியதாஸ், யேசுதாசன், காலஞ்சென்ற பத்திநாதர், குயின்டஸ், ஜீலியன், ரவி, ஜென்சிலா, சிவகுமார் ஆகியோரின் மாமியும், அருண், தர்ஷினி, ஜெயந்தன், இந்துஜா, யூடிட்றோய், றொஷேல், சிந்தியா, கெவின், ரெபேக்கா, றெமிக்சன், ரோசலின் ஆகியோரின் பேத்தியும், அகன்பயன், ஷெரோன், ஷெகான், றியான், பேசியன், ஷேர்லின், கெயின், ஜியான் ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நாளை (02.04.2024) செவ்வாய்க்கிழமை மாலை 03.00 மணியளவில் அன்னாரின் இல்லத்திலிருந்து எடுத்துச்செல்லப்பட்டு, புனித பிரான்சிஸ்கு சவேரியார் ஆலயத்தில் (திருநெல்வேலி) இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு, புனித கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.
0212232376

(CS 28391) S-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பங்குனித்திங்கள் வழிபாடு இன்று

மட்டுவில், ஏப். 1

வரலாற்றுச் சிறப்புமிக்க மட்டுவில் பன்றித் தலைச்சிக் கண்ணகை அம்மன் ஆலயத்தில் மூன்றாவது பங்குனித்திங்கள் வழிபாடுகள் சிறப்பாக பக்திபூர்வமாக இன்று நடைபெறுவதற்கான ஏற்பாடுகள் யாவும் செய்யப்பட்டுள்ளதாக ஆலய தர்ம கர்த்தா சிவ. பஞ்சாட்சரம் தெரிவித்தார்.

இன்று அதிகாலை தொடக்கம் குடாநாட்டின் பல இடங்களிலிருந்தும் பெருமளவு பக்தர்கள் ஆலயத்துக்கு வருகை தருவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது. பக்தர்களுக்கு வேண்டிய பாதுகாப்பு, குடிதண்ணீர், சுகாதாரம், போக்குவரத்து போன்ற வசதிகள் யாவும் செய்யப்பட்டுள்ளன.

பக்தர்கள் ஆலயத்துக்கு வருகை தரும் போது ஆசாரசீலராக வருகை தருமாறும் தங்க ஆபரணங்கள் அணிவதைத் தவிர்த்துக்கொள்ளுமாறும் குழந்தைகளுக்கு தங்க நகைகள் அணிவதை தவிர்த்துக்கொள்ளுமாறும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆலயத்தில் சாவகச்சேரி பொலிஸார் மற்றும் பாடசாலை சாரண மாணவர்கள் செஞ்சிலுவைச் சங்கத் தொண்டர்கள் ஆலயத் தொண்டர்கள் பணியில் ஈடுபடுபடவுள்ளனர். ஆலயச் சூழலில் சாவகச்சேரி பிரதேசசபை, தென்மராட்சி பிரதேச செயலகத்தினர், சாவகச்சேரி சுகாதார பணிமனை, சாவகச்சேரி பொலிஸார் ஆகிய திணைக்களங்களின் உற்சவ காலப் பணிமனைகள் அமைக்கப்பட்டுள்ளன எனவும் தெரிவிக்கப்பட்டது.

இலங்கைப் போக்குவரத்துச் சபையின் யாழ்ப்பாணம் சாலை, பருத்தித்துறை சாலை என்பவற்றின் பேருந்து சேவைகள் பிரதான வீதியிலிருந்து நுணாவில் சந்தி, கனகன்புளியடிச்சந்தி ஊடாக ஆலயத்தைச் சென்றடையும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. அத்துடன் தனியார் போக்குவரத்துச் சேவையினரது சேவைகளும் நடைபெறும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆலயத்தில் அபிஷேகம், பொங்கல், படையல் என்பன பக்திபூர்வமாக நடைபெறவுள்ளன.

தற்பொழுது ஆலயத்தில் திருப்பணி வேலைகள் நடைபெற்று வருவதும் குறிப்பிடத்தக்கது. (ஓ-131)

## வடக்கில்...

தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் ஊடாகக் கோரப்பட்ட தகவலுக்கு வழங்கிய பதிலில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

வடக்கு மாகாணத்தின் அனைத்துப் பொலிஸ் பிரிவுகளிலும் கடந்த ஆண்டு 254 ஆண்களும், 99 பெண்களும் தவறான முடிவு எடுத்து உயிரிழந்துள்ளனர். (அ-ஓ-5)

| பொலிஸ் பிராந்தியம் | ஆண்கள் | பெண்கள் |
|---|---|---|
| யாழ்ப்பாணம் | 91 | 44 |
| காங்கேசன்துறை | 45 | 09 |
| மன்னார் | 15 | 03 |
| வவுனியா | 33 | 08 |
| முல்லைத்தீவு | 25 | 03 |
| கிளிநொச்சி | 45 | 32 |

இறங்குதுறையில் நேற்று மாலை படகில் வந்து இறங்கியுள்ளார். அங்கு நின்ற இருவர் அவரை தாக்கியுள்ளனர். கடற்படையினர் உள்ளிட்ட பலரும் பார்த்திருக்க இந்தச் சம்பவம் நடைபெற்றுள்ளது. காயமடைந்தவர் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். (அ-ஓ-9)

## எரிபொருள்...

புதிய விலை 440 ரூபாவாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. சுப்பர் டீசல் லீற்றர் ஒன்றின் விலை 72 ரூபாவால் குறைக்கப்பட்டுள்ளது. இதன்படி சுப்பர் டீசல் லீற்றர் ஒன்றின் புதிய விலை 386 ரூபாவாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. அத்துடன், மண்ணெண்ணெய் லீற்றர் ஒன்றின் விலை, 12 ரூபாவால் குறைக்கப்பட்டுள்ளதுடன் அதன் புதிய விலை 245 ரூபாவாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

ஒக்ரேன் 92 ரக பெற்றோல் மற்றும் டீசல் ஆகியவற்றின் விலையில் எவ்வித மாற்றங்களும் ஏற்படுத்தப்படவில்லை. (ஓ-இ)

## காந்தள்...

யூனியன் கல்லூரி இல்ல மெய்வல்லுநர் போட்டி நேற்றுமுன்தினம் சனிக்கிழமை பகல் நடைபெற்றது. அதன்போது, இல்ல அலங்கரிப்பு ஒன்று காந்தள் மலர் வடிவில் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

பாடசாலையில் இல்ல மெய்வல்லுநர் போட்டி நடைபெற்றுக் கொண்டிருந்த போதே - நேற்றுமுன்தினம் மு.ப. 11 மணியளவில் பாடசாலைக்குச் சென்ற புலனாய்வாளர்கள் விசாரணைகளை ஆரம்பித்தனர். மேற்படி அலங்காரத்தை முன்னெடுத்திருந்த இல்லத்தைச் சேர்ந்த ஆசிரியர்கள், மாணவர்கள் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டிருந்தனர். அதனை வடிவமைத்த பாடசாலை மாணவனின் வீட்டுக்குச் சென்றும் புலனாய்வாளர்கள் விசாரணைகளை மேற்கொண்டனர். இதன் தொடர்ச்சியாக மேற்படி இல்ல அலங்காரத்துடன் தொடர்புடைய மாணவர்கள் மற்றும் அவர்களது பெற்றோரை தெல்லிப்பழைப் பொலிஸ் நிலையத்துக்கு பொலிஸார் அழைத்திருந்தனர். அவர்களுடன் அதிபர் மற்றும் ஆசிரியர்களும் பொலிஸ் நிலையத்துக்கு அழைக்கப்பட்டிருந்தனர்.

இதன்போது, இலங்கை அரசாங்கத்தின் தரம் - 12 தமிழ் மொழிப்பாடத்தின், முல்லை நிலத்துக்குரிய புலவர் 'பொதுப்பிற் பல்லாங் கண்ணியாரின்' அகநானூற்றுப் பாடலான 'படுமழை பொழிந்த பயமிங்' எனும் செய்யுளில், '...தண்கமழ் கோடல் தாது பிணிய விழ..' எனும் வரிகளிலிருந்து காந்தள் மலரின் உவமிப்பு சுட்டிக்காட்டப்பட்டுள்ளது எனவும், அதன் அடிப்படையிலேயே காந்தள் மலரை ஒத்த அலங்காரத்தை மேற்கொண்டதாகவும் மாணவர்கள், ஆசிரியர்கள் விளக்கமளித்துள்ளனர்.

இதன் பின்னர் சில மாணவர்களதும், ஆசிரியர்களதும் வீடுகளுக்கும் சென்ற புலனாய்வாளர்கள், புலம்பெயர் தமிழர்கள் அல்லது அரசியல் தரப்பினர் யாராவது இதைச் செய்யச் சொன்னார்களா? பண உதவி வழங்கினார்களா? என்ற கோணத்தில் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். பெற்றோரிடம், பிள்ளைகளுக்கு இல்ல அலங்காரத்துக்கு பணம் வழங்கினீர்களா எனவும் புலனாய்வாளர்கள் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

இலங்கை அரசாங்கத்தின் பாடத்திட்டத்திலுள்ள மலரை இல்ல அலங்காரத்துக்கு காட்சிப்படுத்தியமை தொடர்பில் பாதுகாப்புத் தரப்பினர் எடுத்துள்ள நடவடிக்கை கருத்து வெளிப்பாட்டுச் சுதந்திரத்தின் மீதான அச்சுறுத்தலாகவே பார்க்கப்படுகின்றது.

அண்மையில் பட்டிமன்றத்தில் பேசப்பட்ட விடயம் தொடர்பிலும் பாதுகாப்புத் தரப்பினர் விசாரணைகளை முன்னெடுத்திருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (அ-ஓ-5-26-66)

## பிரபாகரன்...

வதற்கான வாய்ப்பு மஹிந்தவுக்கு இருக்கவில்லை. பஸில் ராஜபக்ச, மங்கள சமரவீர, டிரான் அலஸ், ஸ்ரீபதி சூரியாராச்சி இணைந்து, எமில்காந்தன் ஊடாக வடக்கில் வாக்களிப்பை நிறுத்துமாறு புலிகளுக்குப் பணம் வழங்கினர். இதன் பலனாகவே மஹிந்த ராஜபக்ச அன்று வெற்றிபெற்றார்.

புலிகளுக்குப் பணம் வழங்கி அன்று வாக்களிப்பை நிறுத்தியவர்கள்தான் போரை முடித்துவிட்டோம் என அதற்கு விழா எடுக்கின்றனர். ரணில் நாட்டைப் பிரிப்பார், சமஷ்டியே அவரின் இலக்கு எனக் கூறி ரணிலுக்கு அன்று வாக்களிக்கவேண்டாம் எனக் கூறியவர்களே இன்று ஆட்சியை ஒப்படைத்துள்ளனர். உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல் சம்பவம் தொடர்பிலும் குற்றச்சாட்டு உள்ளது. அந்தவகையில் சூழ்ச்சிமூலமே ராஜபக்சக்கள் ஆட்சியைப் பிடித்துள்ளனர்.

2005 ஆம் ஆண்டு தனக்கு வாக்களிக்கவேண்டாம் எனக் கூறியவர்களுடன் இணைந்து ஜனாதிபதித் தேர்தலில் களமிறங்குவதற்குரணில் முயற்சிக்கின்றார். 2005 இல் ஜே.வி.பியினர் மஹிந்தவுக்கு ஆதரவளித்தபோது அவர் புலிகளுக்குப் பணம் வழங்கியது அவர்களுக்குத் தெரியாதா? இந்நாட்டில் அதிக டீல் செய்த கட்சிதான் ஜே.வி.பி. பிரபாகரன் இன்று உயிருடன் இருந்திருந்தால், திசைகாட்டி பக்கம் (தேசிய மக்கள் சக்தி) செல்லும் அடிமைகள், பிரபாகரன்தான் எங்கள் எதிர்கால ஜனாதிபதி எனக்கூறி அவர் பக்கமும் சென்றிருக்கக்கூடும் - என்றார். (அ-ஓ-44)

## துன்னாலையில்...

என 26 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். பொலிஸ்மா அதிபரின் அறிவுறுத்தலுக்கு அமைய மேற்கொள்ளப்பட்டுவரும் 'யுத்திய' நடவடிக்கையின் ஒரு கட்டமாக இந்தக் கைது நடவடிக்கை இடம்பெற்றுள்ளது.

நெல்லியடி, பருத்தித்துறை, வல்வெட்டித்துறை பொலிஸார் காங்கேசன்துறை இரண்டுக்குப் பொறுப்பான உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் தலைமையிலும், விசேட அதிரடிப் படையினரும் இணைந்து நேற்றுமுன்தினம் சனிக்கிழமை இரவு 9 மணியிலிருந்து நேற்று ஞாயிற்றுக்கிழமை அதிகாலை ஒரு மணி வரை இந்தச் சுற்றிவளைப்பை முன்னெடுத்தனர்.

இதன்போது பிடிவிறாந்து பிறப்பிக்கப்பட்ட மற்றும் மோதலில் ஈடுபட்ட, அடையாள அட்டை இன்றிய மேலும் சிறுகுற்றங்கள் புரிந்த ஆண், பெண் உட்பட 26 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்களை நீதிமன்றத்தில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை நெல்லியடிப் பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (அ-ஓ-100)

## மருத்துவமனைப்...

நேற்று மாலை 4.30 மணியளவில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. நயினாதீவைச் சேர்ந்த மேற்படி நபர் குறிகாட்டுவான்

## அண்டை...

வெளிநாடுகளின் தூதுவர்களுடன் இடம்பெற்ற நிகழ்வொன்றில் பங்கேற்றிருந்த ஒருவர் இந்த விடயத்தை தமக்குத் தெரிவித்ததாக முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன வாக்குமூலம் வழங்கிய தாகத் தகவல்கள் குறிப்பிடுகின்றன.

இந்த நிலையில் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தமது வாக்குமூலத்தின் போது குறிப்பிட்ட நிகழ்வுடன் தொடர்புடைய சி.சி.ரி.வி. காணொலிக் காட்சிகளைப் பயன்படுத்தி குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தினர் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். (அ-ஓ-இ)

## தாதியர்கள்...

இலங்கைத் தாதியர் சங்கம் அறிவித்துள்ளது.

தாதியர் கொடுப்பனவு, சீருடைக் கொடுப்பனவு வழங்குதல் உள்ளிட்ட பல பிரச்சினைகளுக்குத் தீர்வு காணுமாறுகோரி இந்த தொழிற்சங்க நடவடிக்கை முன்னெடுக்கப்படுவதாக சங்கத்தின் தலைவர் ரவீந்திர கஹடவல தெரிவித்துள்ளார். (அ-ஓ-இ)

## கிணற்றிலிருந்து...

மனையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இறப்பு விசாரணைகளை திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ஆ.ஜெயபாலசிங்கம் மேற்கொண்டார். (அ-ஓ-27)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



'வேலும்மயிலும்' அறக்கட்டளையின் ஏற்பாட்டில் இலவச பொது மருத்துவ முகாம் பருத்தித்துறையில் கடந்த வியாழக்கிழமை முன்னெடுக்கப்பட்டது.

எஸ்.ஆர்.எஸ். கண் மருத்துவமனையின் கண் ஒளியியல் நிபுணர் சசிகரன் மற்றும் பருத்தித்திறை ஆதார மருத்துவமனை பொது மருத்துவர் பிரதீபன் ஆகியோரின் தலைமையிலான குழுவினரால் மாணவர்கள் உள்ளிட்ட பொதுமக்களுக்கு பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டு, மருத்துவ ஆலோசனைகளும் வழங்கப்பட்டிருந்தன. அதேவேளை பரிசோதனையின் போது மூக்கு கண்ணாடி தேவைப்பாடு உடையதாக இனங்காணப்பட்ட மாணவர்களுக்கு இலவசமாக மூக்குக்கண்ணாடிகளும் வழங்கிவைக்கப்பட்டன. (எ-100)

A/L பௌதிகவியல் [ஆங்கிலம், தமிழ் மூலம்]
சிறப்புப் பட்டதாரி ஆசிரியரால் கற்பிக்கப்படுகிறது.
* 54, கலைமகள் வீதி, அரியாலை
* NEW SCIENCE JAFFNA
077 618 3064

## வாகனம் வாடகைக்கு
Sales வாகனம்
வாடகைக்கு உண்டு.
சுப்பர் ஏசி மூடி அடிக்கப்பட்ட வாகனம்.
077 925 4050

## பணியாளர் தேவை
சாவகச்சேரி நகரில் இயங்கிவரும் பிரபல உணவகம் ஒன்றுக்கு உணவு பரிமாறுவதில் அனுபவம் உள்ளவர்கள் (Waiter) தொடர்பு கொள்ளவும்.
077 649 1027

## நடத்துநர் தேவை
யாழ் - கொழும்பு பயணிகள் சேவையில் ஈடுபடும் PPT BUS இற்கு நடத்துநர் தேவை.
(CR42108) J-1
077 386 6250

## வெளிநாடுகளுக்கான விரைவு பொதிகள்
DHL
சகல நாடுகளுக்கான கடிதங்கள் 3-5 நாட்களில் ஒப்படைக்கப்படும்.
சகல நாடுகளுக்கான பொதிகள் 5-7 நாட்களில் ஒப்படைக்கப்படும்.
திருமுருகன் கொம்நெற்
321, K.K.S வீதி யாழ்ப்பாணம்.
0777 554 528

## காணி விற்பனைக்கு
யாழ்ப்பாணம் திருநெல்வேலி அம்மாச்சி உணவகத்திற்கு முன்பாக 2 1/2 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.
விலை நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.
தரகர்கள் தொடர்பு கொள்ளவேண்டாம்.
(CS54563) J-1
தொடர்பு:- 076 206 1703

இப்பொழுது யாழ்ப்பாணத்தில்
SOLA CHEMICAL COMPANY (PVT) LTD

| | | | | |
|---|---|---|---|---|
| கல்சியம் நீக்கி | 4L | ~~2200~~ | 1400 | விசேட விலைக் கழிவு |
| சலவைத் திரவம் | 4L | ~~3200~~ | 1600 | |
| ஹாண்ட் வோஷ் | 4L | ~~2800~~ | 1600 | |
| டிஷ் வோஷ் | 4L | ~~1900~~ | 950 | |
| மாபிள் கிளீனர் | 4L | ~~2600~~ | 1400 | |
| டொய்லட் கிளீனர் | 4L | ~~2600~~ | 1400 | |
| வோஷிங் பவுடர் | 3Kg | ~~1165~~ | 900 | |

No.576/2C, Siyambalape road, Heiyanthuduwa, makola.
Reg No. PV00240433
288, பலாலி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம்.
021 222 0866, 0777 495 494

## மரண அறிவித்தல்



தோற்றம்
14 . 08 . 1971

மறைவு
23 . 03 . 2024

### செல்வரட்ணம் வரதராஜா

காரைநகர் புதுறோட், எஸ்.எம். கேணியடியை பிறப்பிடமாகவும், பிரித்தானியா லண்டன் வெம்பிளியை வதிவிடமாகவும் கொண்ட செல்வரட்ணம் வரதராஜா அவர்கள் கடந்த 23.03.2024 அன்று சிவபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொலநறுவை நெடுங்கேணி பிரபல வர்த்தகர் (செல்வம்ஸ்) அண்ணாமலை கந்தையாபிள்ளை செல்வரட்ணம் - பத்மாவதி தம்பதியரின் பாசமிகு மகனும், காலஞ்சென்றவரான கொச்சிக்கடை பிரபல வர்த்தகர் கந்தையா பொன்னம்பலம் (நமசிவாயம்) மற்றும் மனோன்மணி (கனடா) தம்பதியரின் அன்பு மருமகனும், சிவலலிதா (பவா) அவர்களின் அருமைக் கணவரும், பவித்ரா, ராகவி, யதுஷன் ஆகியோரின் பாசமிகு தந்தையும், சற்குணராஜா (சற்குரு), ஜெகராஜா (ஜெகன்), ஜெயமாலினி (மாலினி) ஆகியோரின் பாசமிகு அண்ணனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நேற்று (31.03.2024) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 01.00 மணிமுதல் 04.00 மணிவரை Divinity care Funeral, 209, Kenton Road, HA3 OHD இல் பார்வைக்காக வைக்கப்பட்டு, நாளை (02.04.2024) செவ்வாய்க்கிழமை முற்பகல் 09.00 மணிமுதல் 11.30 மணிவரை ST.Marylebone Crematorium East End Road, Finchley, London N2 ORZ இல் இறுதிக்கிரியைகள் நடைபெற்று, பூதவுடல் அதே இடத்தில் தகனம் செய்யப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

S.தவராசா (தவா) மைத்துனன்
077 239 5858

தகவல்:
குடும்பத்தினர்

(CS 283871) S-1

## மரண அறிவித்தல்



தோற்றம்
19 . 02 . 1942

மறைவு
31 . 03 . 2024

### செல்வி திலகவதி பெரியதம்பி

(ஓய்வு பெற்ற வடக்கு கிழக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளர்)

விநாயக முதலியார் வீதி (வி.எம்.றோட்) பருத்தித்துறையை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட செல்வி திலகவதி பெரியதம்பி அவர்கள் நேற்று (31.03.2024) ஞாயிற்றுக்கிழமை இறைபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற பெரியதம்பி - புவனேஸ்வரி தம்பதியரின் புத்திரியும், காலஞ்சென்றவர்களான இராசதுரை, மனோன்மணி, ஜெயகௌரி, ஜெகதேவி மற்றும் சியாமிளா ஆகியோரின் பாசமிகு சகோதரியும், காலஞ்சென்ற யோகேஸ்வரி, பவானந்தன், விக்கினேஸ்வரமூர்த்தி மற்றும் சந்திரலிங்கம் ஆகியோரின் பாசமிகு மைத்துனியும், காலஞ்சென்ற சரவணானந்தன், சண்முகணானந்தன் மற்றும் சிவரமணன், சஞ்யே ஆகியோரின் பெரியம்மாவும், இராஜேஸ்வரன், கமலேஸ்வரன், மதிவதனா ஆகியோரின் பாசமிகு மாமியாரும், வசிகரன், கலைவாணி, ஆர்தி, ஆரதி, அனுஷ்கா, ஆர்தி ஆகியோரின் பாசமிகு பாட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (01.04.2024) திங்கட்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக சுப்பர்மடம் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

வி.எம்.றோட்,
பருத்தித்துறை

(CR 42116) S-1

தகவல்:
குடும்பத்தினர்.
077 571 3506

## மரண அறிவித்தல்



தோற்றம்
12 . 10 . 1947

மறைவு
31 . 03 . 2024

### தேவேந்திரன் தையல்நாயகி

திருநெல்வேலியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட தேவேந்திரன் தையல்நாயகி அவர்கள் நேற்று (31.0302024) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற குமாரசாமி - இரத்தினம் தம்பதியரின் ஏக புத்திரியும், கல்வயலை சேர்ந்த, காலஞ்சென்ற வல்லிபுரம் - ஆச்சிமுத்து தம்பதியரின் மருமகளும், தேவேந்திரனின் (ஓய்வு பெற்ற பிரதம இலிகிதர், பிரதேச செயலகம், உடுவில்) அன்பு மனைவியும், அமிர்தகௌரி (தாதிய உத்தியோகத்தர், யாழ்.போதனா வைத்தியசாலை), ஸ்ரீதரன் (ஆசிரியர், பெரியபுலம் மகா வித்தியாலயம்), பிரபாகரன் (ஆசிரியர், கொக்குவில் இந்துக்கல்லூரி), கருணாகரன் (ஆசிரியர், பெரியபுலம் மகா வித்தியாலயம்), சண்முகப்பிரியா (முன்னாள் ஆசிரியை, சுண்டுக்குளி மகளிர் கல்லூரி, லண்டன்) ஆகியோரின் அன்புத் தாயாரும், கணநாதன் (தபாலக ஊழியர், சுழிபுரம்), கல்யாணி (ஆசிரியை, சுன்னாகம் திருஞானசம்பந்தர் வித்தியாசாலை), கோகுலவாணி (தாதிய உத்தியோகத்தர், யாழ்.போதனா வைத்தியசாலை), கோகிலவர்தனி (முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர், பிரதேச செயலகம், சண்டிலிப்பாய்), சசிகரன் (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமியும், க.தர்மீகன், க.பிரணவன், ஸ்ரீ.ஸ்ரீஜெனனி, ஸ்ரீ.ஸ்ரீஜெனகன், ஸ்ரீ.ஸ்ரீஜெனார்தனி, பி.டிவ்யானி, பி.விகாசினி, க.கம்ஷவர்தனி, ச.அக்ஷரா, ச.அகர்ஷா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், காலஞ்சென்ற குழந்தைவேலு மற்றும் தர்மலிங்கம் ஆகியோரின் மைத்துனியும், காலஞ்சென்ற வனசராணி மற்றும் ருக்மணிதேவி ஆகியோரின் சகலியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (01.04.2024) அவரது இல்லத்தில் மு.ப 11.00 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கொக்குவில் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

186/10, சேர்.பொன்.இராமநாதன் வீதி,
கந்தர்மடம்.

(CS 28388) S-1

தகவல்:
குடும்பத்தினர்.
077 121 8955



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 01.04. 2024 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org